முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

மக்கங்கள்! ஆறு!

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 26 வெள்ளிக்கிழமை (10 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 103

# வாசுவின் கோரிக்கை ஏற்று கைதிகள் மீண்டும் நீர் அருந்தி உண்ணாவிரதம்

## எதிர் தரப்பு எம். பிக்கள் அரசில் சேருவர்

கொழும்பு, மார்ச் 10
பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசுடன் இணைய 7 எதிர்தரப்பு எம் பிக்கள் சிரேஷ்ட அமைச்சர் ஒருவருடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக நம்பகமாகத் தெரியவருவதாக கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
(இ-4)

## அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க மேலும் ஒருவாரகால அவகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 10
கடந்த புதன்கிழமை தொடக்கம் நீர் அருந்துவதையும் நிறுத்தி உண்ணாவிரதத்தைத் தொடர்ந்த யுத்தக் கைதிகள், வாசுதேவ நாணயக்காராவின் வேண்டுகோளை அடுத்து நேற்றுக் காலை முதல் மீண்டும் நீர் அருந்தி உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

யுத்தக் கைதிகள் தொடர்பாக தாம் ஸ்ரீலங்கா அரசுடன் பேசி விரைவில் ஒரு நல்ல முடிவை எடுப்பதாக இரத்தினபுரி மாவட்ட எம்.பியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினருமான வாசுதேவ நாணயக்காரா யுத்தக் கைதிகளுக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இதனை அடுத்தே யுத்தக் கைதிகள் நேற்றுக் காலை முதல் மீண்டும் ஒருவார காலத்துக்கு நீர் மட்டும் அருந்தி உண்ணாவிரதத்தைத் தொடர முடிவு செய்தனர்.

15 பொலீஸாரும் ஒரு சிப்பாயுமாக மொத்தம் 16 பேர் தமது விடுதலை கோரி இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருப்பது தெரிந்ததே.

கடந்த முதலாம் திகதி இவர்களது உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது. முதல் ஏழு தினங்களுக்கு நீர் மட்டும் அருந்தி உண்ணா
(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி




## அரசு மீது மக்கள் வைத்த நம்பிக்கை இன்று கேள்விக்குறியாகிவிட்டது

### பி- பி- ஸிக்கு தமிழ்ச்செல்வன் பேட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 10
அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கைகள் அனைத்தும் கேள்விக் குறியாகி விட்டன.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கேள்வி: பேச்சுவார்த்தைக்கான ஒரு நாளைக் குறிக்க விடுதலைப் புலிகள் மறுத்து வருகிறார்கள் என்று அரசு கூறுகின்றது. அரசியல் பேச்சுவார்த்தையைத் தொடங்க ஏன் மறுக்கிறீர்கள்?

பதில்: அரசியல் பேச்சுகளை நடத்துவதற்கு மறுப்பது என்பது மிகவும் தவறானது. அரசாங்கம் ஆரம்பத்தில் சொன்ன விஷயங்களைக் கூட இதுவரை பேசித் தீர்க்காது இழுத்தடிக்கும் நிலையில் அரசியல் பேச்சுகளை எந்த நிலையில் வைத்துப்
[6 ஆம் பக்கம் பார்க்க]

## யுத்தக்கைதிகளின் நிலையை அறிய உயங்கொட, கெனத் வருகின்றனர்

சிங்களக் கல்விமான் பேராசிரியர் ஜெயதேவ உயங்கொட, அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்னாண்டோ ஆகியோர் உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளின் நிலையை அறிந்து கொள்ள யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இவர்கள் இங்கு வருவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

பேராசிரியர் உயங்கொட, ஆயர் கெனத்பெர்னாண்டோ யாழ். வரும் சமயம், இங்குள்ள முக்கியஸ்தர்கள் பலரையும் சந்திப்பர் எனத் தெரிய வருகிறது.

பேராசிரியர் உயங்கொட அண்மையில் வடபகுதிக்கு வந்திருந்த சமாதானக்குழுவிலும் இடம்பெற்றிருந்தார் என்பது தெரிந்ததே.

ஆயர் கெனத் சமாதானத் தூதுவராக ஏற்கனவே பல தடவைகள் இங்கு வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## பேச்சு நடத்த அரசபிரதிநிதிகள் எந்நாளும் எந்நேரமும் வரலாம்

### அன்ரன் பாலசிங்கம் பி. பி. ஸிக்கு பேட்டி

கொழும்பு, மார்ச் 10
விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு அரச தரப்புப் பிரதிநிதிகள் எந்த நாளும் எந்த நேரமும் வரலாம்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவிப்பதாவது:-

கிட்டத்தட்ட 2 மாதங்களாக பேச்சுக்களே இல்லை.

பேச்சுக்களின் முடக்கநிலை குறித்து அரசதரப்பினரும் விடுதலைப் புலிகளும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகிறார்கள்.

ஆனால் முன் நிபந்தனைகளைப் போட்டு அது நிறைவேறும்வரை அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுகள் நடத்த திகதி குறிக்க புலிகள் மறுத்து வருகிறார்கள் என்று அரசு கூறுகிறது.

ஆனால் அடுத்தடுத்துப் பேச்சுகளுக்குத் திகதி குறிக்க அரசு தான் மறுத்து வருகிறது என்று புலிகளின் தரப்பில் பேசவல்ல விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறுகிறார்.

அரசுத் தரப்புப் பிரதிநிதிகள் எந்த நாளும் எந்த நேரமும் யாழ்ப்பாணம் வரலாம் என்று அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு டீசல் எண்ணெய், வாகனங்கள், மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதுமீதுள்ள தடைகளை அகற்றும்படி அரசை ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும் என்பது புலிகளின் உடனடியான அக்கறையாக இருக்கிறது.

அரசுப் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகளுக்காக வரும்போது சில அரசியல் திட்டங்களையும் கொண்டுவந்தால் விடுதலைப் புலிகள் அவற்றை ஆராய்ந்து பதிலளிப்பார்கள் என்று திரு. அன்ரன் பாலசிங்கம் கூறினார்.

முடக்க நிலையை நீக்க இந்த உறுதி மொழி மட்டும் போதுமா என்று தெரிய
(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளை விடுவிக்கும் சாத்தியக்கூறு குறித்து அரசாங்கம் நடவடிக்கை

### செய்தியாளர்களிடம் பொலிஸ்மா அதிபர் தகவல்

கொழும்பு, மார்ச். 10
யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள கைதிகளை விடுவிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

பொலீஸ்மா அதிபர் பிராங் டி சில்வா நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

புலிகளின் பாதுகாப்பில் உள்ள பாதுகாப்புப் படையினரில் 16 பேரின் உடல் நிலை மோசமானதாக இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இவர்களை கவனிப்பதற்கு மருத்துவ உத்தியோகத்தர்களை அனுப்புமாறு அரசாங்கம் யாழ். அரச அதிபரை கேட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இந்தத் தகவல்களைத் தெரிவித்த இலங்கை வானொலிச் செய்தியில் யுத்தக் கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து எதுவுமே தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

## அன்றாடப் பிரச்சினை, அரசியல் பிரச்சினைகளை ஒரே காலத்தில் தனித்தனியாகப் பேச முடியும்!

### அரச அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10
தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளையும், அரசியல் பிரச்சினையையும் ஒரேவேளையில் — சமகாலத்தில் — தனித்தனியாகப் பேசலாம்.

இவ்வாறு அரசாங்கம் புதிய நிலைப்பாடு ஒன்றைத் தெரிவித்திருக்கிறது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை தடைப்பட்டிருப்பதையும், அதற்கான தனது காரணங்களையும் தெரிவித்து அரசாங்கம் நேற்று முன்தினம் ஓர் அறிக்கையை வெளியிட்டது.

ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அந்த நீண்ட அறிக்கை நேற்று ரூபவாஹினியில் வாசிக்கப்பட்டது.

பேச்சுவார்த்தை தடைப்பட்டதற்கு விடுதலைப் புலிகள் மீது குற்றம் சுமத்தும் விதத்திலேயே அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

பேச்சுவார்த்தை தடைப்பட்டிருப்பது குறித்து அரசு கவலை கொள்வதாகவும் ஓரிடத்தில் தெரிவிக்கப்பட்டது.

சமாதான முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டிருப்பினும் அரசாங்கம் பேச்சுவார்த்தை மூலமே பிரச்சினைக்குத் தீர்வு
[6ஆம் பக்கம் பார்க்க]

## எவரது வற்புறுத்தலின் பேரிலும் உண்ணாவிரதம் ஆரம்பிக்கவில்லை

### யுத்தக்கைதிகள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10
எவரது வற்புறுத்தலின் பேரிலும் நாம் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கவில்லை. சுயமாக சிந்தித்து நாம் எமது விடுதலையை வேண்டியே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கினோம்.

இவ்வாறு தெரிவித்தனர் உண்ணாவிரதம் இருந்து வரும் யுத்தக்கைதிகள்.

வற்புறுத்தலின் பேரில் உண்ணாவிரதம் இருப்பதாக கொழும்பில் அரசதரப்பிலும் பத்திரிகைகளிலும் வெளிவந்த செய்திகள் உண்மைக்குப் புறம்பான விசமத்தனமான பிரசாரங்கள் என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

வீட்டுக்கஷ்ட நிலைமையினால் பொலீஸ் சேவையில் சேர்ந்து பிழைப்போம் என அரசாங்கத்தை நம்பி சேர்ந்த எங்களை காப்பாற்ற அரசாங்கம் அக்கறை இல்லாதிருக்கிறது.

எங்களது உடல் மிகவும் சோர்வுற்றுள்ளது. குடல்கள் காய்ந்து வறண்டு போயுள்ளன என உண்ணாவிரதிகளில் ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

## கொழும்பு சிறைச்சாலை கைகலப்பில் பலர் காயம்

### காவலர்களும் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, மார்ச். 10
கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு விளக்க மறியல் சிறைச்சாலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவத்தில் 30 கைதிகளும் உத்தியோகத்தர்களும் காயமடைந்தார்கள் என்றும்–

இவர்கள் சிகிச்சைக்காக கொழும்பு பொரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஆஸ்பத்திரி வட்டா
[6 ஆம் பக்கம் பார்க்க]

## சிறைக்காவலர்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 10
சிறையில் வைக்கப்பட்டுள்ள 'பாதாள உலக' குற்றவாளிகளால் தமக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறி–

கொழும்பில் இருநூறுக்கு மேற்பட்ட சிறைக்காவலர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

பாதாள உலகக் குற்றவாளிகளால் தமது கடமை நேரத்தில் மட்டுமன்றி ஓய்வு நேரத்திலும் தமது பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன் காரணமாகத் தமது சட்டபூர்வமான கடமையைச் செய்ய முடியாது உள்ளதாகவும்–

பாதாள உலகக்காரருக்கு மேலதிகாரிகளின் ஆதரவும் செல்வாக்கும் உண்டு என்றும்–

சிறையில் இருக்கும்போதே தொலைபேசியில் வெளியாருடன் தொடர்பு கொள்வதற்கான வசதி பாதாள உலகக் குற்றவாளிகளுக்கு செய்து கொடுக்கப்படுவதாகவும்–

சிறைக்காவலர்கள் தெரிவித்தனர். (அ)

## சர்வதேச மகளிர் தினத்தில் கோட்டரீதியாக நடந்த பேரணிகளும் கூட்டங்களும்

யாழ்ப்பாணம், மார்ச் 10
சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் வடதமிழீழம் எங்கும் கூட்டங்களும் பேரணிகளும் பரவலாக இடம்பெற்றன. ஒவ்வொரு கோட்ட ரீதியாகவும் கூட்டங்கள் இடம்பெற்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த இந்தக் கூட்டங்களுக்கு பெருமளவிலான மக்கள் வந்திருந்தனர். பெண்களின் விடுதலைப் போராட்டத்தைச் சித்திரிக்கும் நாடகங்கள், பட்டிமன்றங்கள், கவியரங்கங்கள் என பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கிளிநொச்சியில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்ட பேரணி ஒன்று இடம்பெற்றது. கிளி
(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் இல்ல கொடி வாரம்

இந்து சமயப் பேரவையினால் நடத்தப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தின் கொடி வாரம் இன்று தொடக்கம் எதிர்வரும் வியாழக்கிழமை வரை நடைபெறும்.

பாடசாலைகள், அலுவலகங்கள், ஆலயங்களில் சிறுவர் இல்லக் கொடி விற்கப்படும்.

கொடி விற்பனை சிறுவர் இல்லத்தில் வைத்து இன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பிக்கப்படும். (அ)

## வவுனியா- மதவாச்சி எல்லையில் புதிதாக ஓர் ராணுவ தடைமுகாம்

### நேற்று திறந்து வைக்கப்பட்டது

அனுராதபுரம் மாவட்டத்தில் புதிதாக ஓர் இராணுவத் தடைமுகாம் நேற்று திறந்து வைக்கப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வவுனியா மதவாச்சி எல்லையிலுள்ள பூனாவை என்ற இடத்தில் இந்த தடைமுகாம் அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கொழும்பிலிருந்து யாழ் செல்லும் பயணிகளையும் பொருள்களையும் சோதனையிடுவதற்கு வவுனியா ஈரப்பெரியகுளத்திலும் தாண்டிக்குளத்திலும் இரு தடை முகாம்கள் உள்ளன. (இ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 4ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் வருட இறுதிக்குள் நியமிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், மார்ச் 10
கடந்த டிசம்பர் மாதம் 31ஆம் திகதி நடத்தப்பட்ட ஆசிரிய தேர்வுக்கான போட்டிப் பரீட்சையிலிருந்து 5ஆயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

முன்னர் இப் பரீட்சை மூலம் ஆயிரம் பேர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாணங்களில் நியமிக்கப்பட விருந்தனர்.

இப்போது மேலும் 4ஆயிரம் ஆசிரியர்களை தேசிய மட்டத்தில் தெரிவு செய்வதெனவும் 3ஆயிரத்து 500 தொடக்கம் 4ஆயிரம்பேருக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் நியமனம் வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வடக்கில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் சேவையிலுள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது என்ற தீர்மானம் மறுபரிசிலனை செய்யப்பட்டு வருகின்றது.

வடக்குக்கு வெளியே சேவையிலுள்ள தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க முடியாமையே இதற்குக் காரணம் என்றும்—

எனினும் சேவையிலுள்ள தொண்டராசிரியர்கள் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியிருந்தால், அவர்களின் சேவைக்காலத்திற்கு மேலதிக புள்ளிகளை வழங்கி புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யலாம் என்ற கருத்தே அமைச்சு மற்றும் கல்விச் சேவைச்சபை வட்டாரங்களில் நிலவுகிறது என்றும் அறிய வருகிறது.

இதேவேளை வரவு - செலவுத்திட்ட கல்வி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் பேசிய கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன 5ஆயிரம் தமிழ் ஆசிரியர்கள் இவ்வருடத்திற்குள் நியமிக்கப்படுவார்கள் என்று உறுதியளித்துள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

## யாழ். நகரில் போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 10
சோதனை உடைப்படிகளைத் தயாரிப்பவர்களைத் தெரிவு செய்வதற்காக நடத்தப்படும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை நாளை சனிக்கிழமை வேம்படி மகளிர் பாடசாலையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை இதேதினத்தில் கொழும்பில் மாத்திரம் நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை இன்று வெள்ளிக்கிழமை வலயம் -1 கல்வி அலுவலகத்திலும், நாளை பரீட்சை நிலையத்திலும், பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாறு வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கின்றார். (ஒ)

## அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் பத்திரிகைகள்

### சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 10
சில பத்திரிகைகள் ஆபாசமாகவும் அரசுக்கும் அவமரியாதையை ஏற்படுத்தும் விதத்திலும் எழுதி வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குற்றஞ் சாட்டியுள்ளார்.

''சண்டே ரைம்ஸ்'' திவயன பத்திரிகைகள் மீது மான நட்ட வழக்கு தொடர்ந்துள்ளேன்''.

''ராவய மற்றும் யுக்திய பத்திரிகைகளும் தொடர்ந்து தற்போது போன்று எழுதி வருமானால் அவற்றுக்கு எதிராகவும் மான நட்ட வழக்குத் தொடர்வேன்'' — என்றும் அவர் கூறினார்.

''ஜனநாயக முறைப்படி செயல்படுவது எப்படி என்று பத்திரிகைகளுக்கு தெரியாதிருக்குமானால் அவற்றுக்குப் பாடம் படிப்பிப்போம்.

''ரணிலின் டெல்ஷான் டெலிவிஷன், காமினியின் இரிவி டெலிவிஷன் மஹாராஜாவின் எம்ரிவி டெலிவிஷன் ஆகியன திட்டமிட்டு அரசாங்கத்தை அவமானப்படுத்துகின்றன. பைத்தியக்காரர்களைத் துரத்தியடிப்பது போன்று இவற்றையும் துரத்துவோமானால் நாங்கள் அவர்களைத் திருத்த முடியும்'' — என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

## தங்க ஆபரணம் யாருடையது?

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ். மருதடி வீதியில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு பருத்தித்துறை தமிழீழ மாவட்ட நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும்—

உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளும்படியும் கோரப்பட்டுள்ளது. (இ)

## நமது கல்வி கொள்கை சுமை நீக்கப்பட வேண்டும்

### பரிசளிப்பு நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,மார்ச் 10
''நமது கல்விக் கொள்கையில் காணப்படுகின்ற தேவையற்ற சுமைகள் நீக்கப்பட வேண்டும்''.

இளைஞர்களை முழுமையாக விளையாட்டுத் துறையில் பங்கு கொள்ள விடாது கல்விச்சுமை அழுத்துகிறது—

யாழ். அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கத் தலைவர் கலாநிதி ரி. டபிள்யூ ஜெயக்குலராஜா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். ஹட்டன் நஷனல் வங்கிக்கிளை நடத்திய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

இளைஞர்கள் தமது பொன்னான காலத்தை வீணாக்காது இவ்வாறான விளையாட்டு துறைகளில் முழுமையாக பங்களிக்க வேண்டும். இளம் சமுதாயத்தினரிடையே சகோதரத்துவம், விட்டுக் கொடுப்புகள்போன்ற உயரிய மனிதப் பண்புகளை விளையாட்டுகள் மூலமே வளர்க்க முடியும்.

விளையாட்டுகளில் எமது ஆற்றல்களை வெளிப்படுத்தி இந்த மண்ணுக்கும் மக்களுக்கும்புகழ்சேர்க்க வேண்டும் — என்றார்.

அண்மையில் யாழ். பல்கலைக் கழக கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வுக்கு யாழ். ஹட்டன் நஷனல்வங்கிகிளை முகாமையாளர் தலைமை வகித்தார். [ஒ-14-7]

## தனியார் மயப்படுத்தலில் அரசு புதிய நடைமுறை

### ஜனாதிபதி சந்திரிகா விளக்கம்

அரச நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்துவதில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு புதிய நடைமுறை ஒன்றைக் கடைப்பிடிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர்கள் கலந்துகொண்ட கூட்டம்ஒன்றில் பேசியபோது, ஜனாதிபதி சந்திரிகா—''நாம் செய்யப்போவது தனியார் மயப்படுத்தும் திட்டம் அல்ல. சில அரச நிறுவனங்களின் நிர்வாகங்களை தனியார் துறையினரிடம் ஒப்படைக்கும் அதே நேரத்தில், அவற்றின் உரிமையை அரசு தனது பொறுப்பில் வைத்திருக்கும். மற்ற சில நிறுவனங்களை அரசு தனியார் துறையினரிடம் ஒப்படைத்துவிடும். எனினும் அவற்றின் பங்குகளில் பெரும்பாலானவற்றை அரசு தன்னிடமே வைத்துக் கொள்ளும்''— என்று தெரிதார்.

## உருளைக்கிழங்கு அறுவடை மாத இறுதியில் முடிவுறும்

### இதுவரை 75 வீதம் பூர்த்தி

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ். மாவட்டத்தில் பயிரிடப்பட்ட உருளைகிழங்கு செய்கையில் 75 வீதமானவை அறுவடை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 180 ஹெக்டர் நிலப்பரப்பில் இம்முறை உருளைக்கிழங்கு பயிரிடப்பட்டது.

இதற்கென 400 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

இம்முறைகூடுதலாக கிழங்கு பயிரிடப்பட்டதாலேயே அதன் விலை பெரியளவில் வீழ்ச்சி கண்டது எனவும்—

பெரும்பாலும் இம்மாத இறுதியளவில் உருளைக் கிழங்கின் அறுவடை முற்று முழுதாக முடிந்து விடும் எனவும் அவ்வதிகாரி மேலும்தெரிவித்தார். (ஒ-17)

## பாடசாலை நிகழ்வுகள்

தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை, வறுத்தலை விளான் அ. மி. த. க பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கலந்து கொள்வார். (ஐ-14-89)

★ ★ ★

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய இல்ல மெய் வன்மைப்போட்டிவித்தியாலய அருகில் உள்ள மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு அதிபர் திருமதி ப. அன்னலிங்கம் தலைமையில் நடைபெறும்.

★ ★ ★

மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் அதிபர் திரு. வி. சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பொறியியல் மதி உரைஞர் திரு. சி. உருத்திரலிங்கம் கலந்து கொள்வார் (ஐ-14-89)

★ ★ ★

சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00மணிக்கு பாடசாலை அதிபர் திரு. இ. இராசேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கலந்து கொள்வார். [ஐ-89]

★ ★ ★

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2-30 மணிக்கு சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் அதிபர் மு. நாகேந்திரராஜா தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பிரதிப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் கலந்து கொள்வார். [117]

★ ★ ★

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பி. ப. 2-00மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி செல்லம்மா பத்மநாதன் தலைமையில் நடைபெறும். (117)

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் மைதானத்...

இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. து. சந்தோசம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். [ஐ-5]

★ ★ ★

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின்வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

வலி. கிழக்கு கோப்பாய் பிரதேச செயலரும், மேலதிக அரச அதிபருமான திரு. க. கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-5)

★ ★ ★

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும். தென்மராட்சி, உதவி கல்விப் பணிப்பாளர் திரு. நா. சந்தியநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-5)

★ ★ ★

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரியின் வருடாந்த, இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று வெள்ளி பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும். பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் வைத்தியப் பிரிவு வைத்திய ஆலோசகர் வைத்திய கலாநிதி செல்வி சி. பத்மலோஜினி கலந்து கொள்வார். [ஐ-5-155]

★ ★ ★

கப்பர்மலை அ. த. க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திரு. எஸ் அனந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறும். (ஒ-155)

★ ★ ★

நவாலி மகா வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வெள்ளி பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் திருமதி இ. விஸ்வலிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ஒ-90)

★ ★ ★

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு அதிபர் திரு. இ. யோகசிங்கம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ஒ)

★ ★ ★

கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. நா. செல்வரத்தினம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (ஒ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10
யாழ் மாவட்ட பாடசாலைகள் அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் போட்டித் தொடரில் இன்று பிற்பகலும் நாளை காலையும் இடம் பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ சென்ஜோன்ஸ் மைதானத்தில்—
சென். ஜோன்ஸ் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி.

★ ★ ★

★ கொக்குவில் இந்து மைதானத்தில் —
யாழ். இந்துக்கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி.

★ ★ ★

★ சென். பற்றிக்ஸ் மைதானத்தில் —
யாழ். மத்தியகல்லூரி எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி. [ஒ-20]

## மகரயாழ் விருது

யாழ்ப்பாணம், மார்ச் 10
மக்கள் கருத்தின் அடிப்படையில் 1995 ஆம் ஆண்டுக்கான ''மகரயாழ்'' விருதுக்கு உரியவரின் பெயரை அறிவிப்பதற்காக கம்பன் கழக அறிஞர் குழு எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கம்பன் கோட்டத்தில் கூடவுள்ளது.

இவ்வருடம் கம்பன் கழகம் தனது15 ஆண்டுகளை நிறைவு செய்வதால்'' மகரயாழ்'' விருதுக்குரிய பணத் தொகையை ரூபா ஒரு லட்சமாக அதிகரிக்க முடிவு செய்திருப்பது தெரிந்ததே. (ஐ-5)


உ

வண் கிழக்கு கந்தர்மடம்
அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

சைவத் திருநெறி மாண்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருஷம் பங்குனித் திங்கள் 8ஆம் நாள் [1995-03-22] புதன்கிழமை காலை 9-32நிமிடம் முதல் 11-22வரையுள்ள இடபலக்ன சுபமுகூர்த்த வேளையில் மூல மூர்த்தியாகிய ஸ்ரீஞானவைரவப் பெருமானுக்கும், சித்திவிநாயகர் பாலமுருகன்ஆகிய பரிவாரமூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளது.

அத்தருணம் அடியார்கள் அனைவரும் ஆலயம் நாடி வந்து. பெருமானை தரிசித்து திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்,

இங்ஙனம்;
தேவஸ்தான பரிபாலன சபை.

விளம்பர அன்பளிப்பு:
சுமங்கலி தொழிலகம்
200, அரசடி வீதி, கந்தர்மடம்.
மனையியல் தயாரிப்புக்கள், மிளகாய்த் தூள், கோப்பித்தூள், சீகைக்காய்ப்பவுடர்.
[சி-615]


## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
10 — 03 — 1920
மறைவு:
19 — 02 — 1994

திதி:
10 — 03 — 1995

### திருமதி சின்னத்துரை முத்தம்மா
(வயாவிளான்)

எங்கள் குடும்பக் குலவிளக்காய், மலைமேற் தீபம் போல் பிரகாசித்து. அன்பு மழை பொழிந்து, அமுத மொழி பேசி, ஆசைக்கரம் நீட்டி எங்களையெல்லாம் நல்வழிப்படுத்திய அன்புத் தெய்வமே! அம்மாவே! அம்மம்மாவே! இறப்பு இயற்கையானது தான். எங்களை நினைத்து வாழ்ந்த நீங்கள் எப்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள். காலன் உங்களை எங்களிடமிருந்து பிரித்தாலும், உங்கள் நினைவு எங்கள் இதயங்களில் ஓராண்டு என்ன, ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் நிலைத்து நிற்கும்.

உன் ஆத்மா சாந்தியடைவதாக.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(வயாவிளான்)

இலங்கை வங்கி ஒழுங்கை,
ஐங்கரன் வீதி,
சுன்னாகம்.
[8274]


பகிரங்க ஏலவிற்பனை

மருது. வேம்பு விறகுகள் ஏலத்தில் விற்கப்படும். சனிக்கிழமை (11 - 03 - 95) பி. பகல் 4-00 மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறும்.

தலைவர்,
தேர் திருப்பணிச் சபை.
[35602]

யாழ். மத்தியகல்லூரி பரியோவான் கல்லூரி
91 ஆவது மாபெரும் கிரிக்கெற் போட்டி

17-03-1995 வெள்ளி, 18-03-1995 சனி ஆகிய இரு தினங்களிலும் நடைபெறும் பெரும் போட்டியை பார்க்கவரும் பழைய மாணவர்களின் வசதி கருதி இரு கல்லூரி பழையமாணவர் சங்கங்களும் இணைந்து அமைக்கும் கூடார (Tent) அனுமதி அன்பளிப்பு நாளொன்றுக்கு ரூபா 25/- மட்டும்.

அனுமதிச் சிட்டுக்கள் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:

| பரியோவான் கல்லூரி காரியாலயம் | யாழ். மத்தியகல்லூரி காரியாலயம் |
|---|---|
| ஜெயா கதிர்காமர், செயலாளர், பழையமாணவர் சங்கம், பரியோவான் கல்லூரி. | என். இராஜதேவன், செயலாளர், பழையமாணவர் சங்கம், யாழ். மத்தியகல்லூரி, |
| இலங்கை வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். | ஏ.பவர் அன் கொம்பனி லிட். 51, அம்மன் வீதி, யாழ்ப்பாணம். |

தகவல்:
இரு கல்லூரி பழைய மாணவர் சங்கங்களின் செயலாளர்கள்.
(35604)

பகிரங்க அறிவித்தல்
திருநெல்வேலி
ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்

17-2-95ல் உதயன் பத்திரிகையில் வந்த அறிவித்தலின் பிரகாரம் தேர்த் திருப்பணிக்கென தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளரின் பணிப்பின் பேரில் ஆலய விசாரணைப் பிரிவினால் நியமிக்கப்பட்ட திருப்பணிக் குழுவினருக்கும் பொதுச் சபையினால் தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

தலைவர்
பரிபாலன சபை
[35607]

வந்துவிட்டது!

எழுதுவினைஞர் சேவைக்குரிய போட்டிப் பரீட்சை வழிகாட்டி விலை - 115/-
இலங்கை நிருவாக சேவைப் பரீட்சைக்குரியது S – L – A – S விலை - 175/-
இலங்கை கல்வி நிருவாக சேவைப் பரீட்சைக்குரிய S - L - E - A - S விலை - 215/-
வெளியீடு: அஸ்ரன் பதிப்பகம்
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
[சி/617]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இந்து சமயப் பேரவை - யாழ்ப்பாணம்

# கைதடி சைவ சிறுவர் இல்லக் கொடிவாரம்

**10 - 03 - 1995 முதல் 16 - 03 - 1995 வரை**

## கொடி வாரத்தில் வாரி வழங்குங்கள்

அங்கொன்றும் இங்கொன்றுமாக இயங்கி வந்த இந்து சமய நிறுவனங்களை ஒருங்கிணைத்து பயனுள்ள பணிபல புரிய வேண்டும் என்ற நோக்கில் எம்மால் ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனமே இந்து சமயப் பேரவையாகும்.

இவர்கள் கைதடி சைவச்சிறார் இல்லத்தில் யாரு மற்ற அன்புக் குழந்தைகளை அரவணைத்து ஆறுதல் அளித்து வருவது பெருமைக்குரியதாகும்.

இக் குழந்தைகளின் உயர்வுக்காகவும், பேரவையின் ஏனைய சமய சமூக பணிகளுக்காகவும் பெருமளவு பணம் தேவைப்படுகிறது. இப்பணத்தைச் சேகரிக்கும் நோக்கில் பேரவையால் நடத்தப்படும் கொடிவாரத்திற்கு வாரி வழங்குமாறு தர்மசீலர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வதுடன் பேரவைப் பணிகள் சிறக்க வாழ்த்துகிறேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**
ஆதீன குருமகா சந்நிதானம், நல்லை ஆதீனம்.

## உயரிய பணிக்கு உதவ முன்வாருங்கள்

''தருமம் என்று ஒரு பொருளுது'' என்பதை உள்ளத்தில் பதித்துக்கொண்டு கருமம் ஆற்றவேண்டிய காலம் இது.

அல்லற்பட்டு அவதியுறும் அகதிகள் ஒரு புறம். ஏழைகளுக்கு கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டிய இடம் கல்வி நிலையங்களை புனரமைக்கும் பணிகள் இன்னொரு புறம். ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களை பராமரிக்க வேண்டிய கடமை மறுபுறம் என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த நிலையில் நல்ல உள்ளம் படைத்த தரும சீலர்களின் கைங்கரியத்தினால் இவை ஓரளவு நிறைவேறிக் கொண்டு வருகின்றன என்பது மகிழ்ச்சி.

கைதடிச் சைவ சிறுவர் இல்லப் பணியை சிந்திக்க வைக்கு சிறந்த தினம் மார்ச் 10ஆம் திகதியாகும். கடந்த பல ஆண்டுகளாக இந்த நாளில் கொடி விற்பனை நடத்தி இல்லப் பணிக்கு உதவி வரும் ஒழுங்கை நாம் பாராட்டுகிறோம். இவ்வாண்டும் இவ்வுயரிய பணியை அனைவரும் கருத்திற்கொண்டு உதவ முன்வருவார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

**தங்கம்மா அப்பாக்குட்டி**
(தலைவர், துர்க்கை அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபை)

## கொடிவாரம் வெற்றி பெறுக!

இந்து சமயப் பேரவையால் பராமரிக்கப்படும் கைதடி சைவச் சிறுவர் இல்லக் கொடிவாரம் சம்பந்தமாக வெளியிடப்படும் பத்திரிகைச் சிறப்பு மலருக்கு இவ் ஆசிச் செய்தியை வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்து சமயப் பேரவை ஆற்றும் சமயப் பணிகளுடன் நிர்க்கதிக்குள்ளான அநாதைக் குழந்தைகளைப் பராமரித்து வருவது வரவேற்கத்தக்கதாகும். நெருக்கடியான இக்கால கட்டத்தில் அநாதைகளுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் பல்வேறு துன்பங்களுக்கு உள்ளான ஏனையோருக்கும் கைகொடுத்து உதவுவது சமுதாயத்தின் கடமையாகும். கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் வாழும் ஆதரவற்ற குழந்தைகளின் உணவு, உடை, கல்வி மற்றும் தேவைகளை இந்து சமயப் பேரவை நிறைவேற்றி வருகின்றது. இதற்குப் பெருந்தொகைப் பணம் தேவைப்படுவதால் கொடிவாரம் ஒன்றை நடத்தி அன்பர்கள், ஆதரவாளர்கள், கொடை வள்ளல்களிடமிருந்து நிதி சேகரிப்பது பொருத்தமானதாகும் இக் கொடிவாரம் வெற்றிபெற எனது நல்லாசிகள்.

**க. பொன்னம்பலம்**
அரசாங்க அதிபர்

## பன்முகப்பட்ட சேவைகளை நல்கும் இந்து சமயப் பேரவை

இந்து சமயப் பேரவை எடுக்கும் கொடிவாரம் தொடர்பாக இவ் வாழ்த்தினை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இந்து சமயப்பேரவை நேரமறிந்து எங்கள் மக்களுக்கு தொண்டாற்றும் நிறுவனமாக அமைந்தது.

இராணுவக் குண்டுவீச்சு விமானங்கள் எங்கள் மண்ணிலே உள்ள கோயில்களிலே அட்டூழியத்தனத்துடன் குண்டு மழை பொழிந்து எங்கள் சமய நம்பிக்கையினை, எங்கள் பண்பாட்டினை சிதறடிக்க முயன்றபோது அத்தகைய கொடூர முயற்சிக்கு எதிராக முதன் முதல் அறிக்கைகள் மூலமாக குரல் கொடுத்தவர்கள் இந்து சமயப் பேரவையினரே.

அவர்களுடைய முயற்சிகள் பன்முகப்பட்டன. அவர்களுடைய பணிகள் யாவற்றையும் முன் எடுக்கத் தேவையான பணத்திற்கு நடத்தப்படும் இக் கொடி நாளிலே நிதி மிகுந்தவர்கள் பொற்குவையும், நிதி குறைந்தவர்கள் சிறு தொகை யாவது கொடுத்துதவ வேண்டும்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்,**
தலைவர், சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

## அனைவரும் வாரி வழங்குவோம்

திக்கற்றிருக்கும் சிறுவர்களுக்கு செய்யும் தொண்டை இறைவனுக்குச் செய்யும் தொண்டாக நினைத்துச் செயற்படும் இந்துசமயப் பேரவையின் பணி வளர வாழ்த்துவதில் இக் கொடி வாரத்தில் பெருமகிழ்வடைகின்றேன். இந்து சமயப் பணிகளுடன் பொதுப்பணிகளையும் பேரவை முன்னெடுத்துச் செய்வது போற்றத் தக்கது. இல்லத்தில் வளரும் சிறார்களின் வாழ்வு வளம் பெற நாம் அனைவரும் வாரிக் கொடுப்போம்.

**ஆ. மகாலிங்கம்**
தலைவர்
திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்த சபை

# தர்மப் பணி வியாபித்துப் பரவ

# தாராளமாக நிதி உதவி தாருங்கள்

கைதடி சைவச் சிறுவர் இல்லம் இந்துசமயப் பேரவையால் நடத்தப்படுகின்றது. இந்த இல்லத்தின் சிறப்பான பணிகள் சைவசமயிகளுக்கு பெருமை தருகின்றன. இவ் இல்லச் சிறுவர்களுக்கு மிகக் கூடுதலான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சகல பிள்ளைகளும் அருகாமையில் இருக்கும் இரண்டு பள்ளிக்கூடங்களில் கல்வி பயில்கிறார்கள். இவர்கள் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் நிற்கின்றனர். சைவச்சூழலில் சைவசமய மரபுகளுக்கு அமைய வளர்ந்து வரும் இப் பிள்ளைகளுக்கு சைவசமய வளர்ச்சியில் ஆக்கறை கொண்டுள்ள பெருமக்களின் பேராதரவுடன் நாம் மென்மேலும் வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

பிள்ளைகளின் கல்வி அறிவையும் பொது அறிவையும் பெருக்குவதற்காக சிறிய அளவிலான நூல்நிலையம் ஒன்றையும் நடத்துகின்றோம். விளையாட்டுகளிலும் தேகப் பயிற்சிகளிலும் பிள்ளைகள் பங்குபற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சைவசமய அபிமானிகள் சமூக நலனுக்கு உரிய திட்டங்களை வகுப்பதில்லை என்ற குறையை நீக்கும் முகமாக இந்தச் சிறுவர் இல்லத்தைச் சமூக நலனில் அக்கறை கொண்டவர்களின் ஆதரவுடன் நடத்துகின்றோம். சிறந்தகட்டடங்கள் கொண்ட இந்த இல்லத்திற்கு மேலும் வசதிகள் ஏற்படுத்துவது அவசியமாக உள்ளது.

எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இல்லச் சிறார்களுக்கான அன்னமிடும் திட்டத்தில் பல அன்பர்கள் பங்கு பற்றி பேருதவி புரிகிறார்கள் தங்கள் குழந்தைகளின் பிறந்ததினம், பெற்றோர் உறவினர் நினைவு தினங்கள், திருமண வைபவங்கள் போன்ற காலத்தில் சிறுவர்களுக்கு உணவளித்து அவர்களையும் மகிழ்வித்து தாமும் மகிழ்கிறார்கள்.

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் ஆதரவற்ற சிறார்களை பராமரிக்கின்ற நிலையங்களை மென்மேலும் நிறுவுவதற்குப் பேரவை திட்டமிட்டுள்ளது.

தமிழீழம் முழுவதும் இந்தப் பணி வியாபித்துப் பரவ இக் கொடி வாரத்தில் பூரண பங்கு கொண்டு நிதியுதவி தந்து எம்மை ஊக்குவிக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

எல்லா மக்களும் சகல நலன்களும் பெற்று வாழப் பார்வதி பரமேஸ்வரன் திருவருளைப் பிரார்த்திப்போமாக.

| | | |
|---|---|---|
| **நா. முத்தையா,** தலைவர். | **சி. நாகராசா,** பொருளாளர். | **சி. சக்திகிரீவன்,** செயலாளர். |

**இந்து சமய பேரவை,**
**யாழ்ப்பாணம்.**

## இன்றைய ஆரம்ப விழா

இடம்: கைதடி சைவச் சிறுவர் இல்லம்
நேரம்: மு. ப. 9-00 மணி
தலைவர்: ஆத்மஜோதி திரு. நா முத்தையா அவர்கள்
பிரதம விருந்தினர்: உயர்திரு க. பொன்னம்பலம் அவர்கள்
(அரசாங்க அதிபர் - யாழ்ப்பாணம்)

### ★ நிகழ்ச்சி நிரல் ★

★ பூசை வழிபாடுகள்:
★ மங்கள விளக்கேற்றல்: திரு. ஈ. சரவணபவன் (நிர்வாக இயக்குனர், உதயன்)
மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராஜா அவர்கள்
★ தேவாரம்; இல்ல மாணவிகள்
★ மௌன வணக்கம்:
★ பேரவைக் கொடி ஏற்றல்: பிரதம விருந்தினர்
★ வரவேற்புரை: திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர், இந்து சமயப் பேரவை)
★ தலைமையுரை:
★ ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன குருமகாசன்னிதானம்)
மஹாராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் (மாவை ஆதீனம்)
ஸ்ரீ திருஅரங்கன் சுவாமிகள் (இணுவில்)
★ வாழ்த்துரை; பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள்
(தலைவர், சைவவித்தியா விருத்திச் சங்கம்)
திருவாளர் வே. பொ. பலாசிங்கம் அவர்கள்
(யாழ் மாநகரசபை, ஆணையாளர்)
திரு. கே. கேதீஸ்வரன் (பதில் பிரதேசச் செயலாளர், சாவகச்சேரி)
திரு எஸ். நவரதினராசா (தலைவர், லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)
திருமதி P கணேசலிங்கம்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் தென்மராட்சிக் கோட்டம்)
★ சிறப்புரை; சட்டத்தரணி சி. நாகராசா (பொருளாளர், இ. ச. பேரவை)
திரு. சு சிவபாலன் (நிர்வாக சபை உறுப்பினர், இ. ச. பேரவை)
★ முதற் கொடி வழங்கல்: பிரதம விருந்தினர்
★ முதற் கொடி பெறுவோர்: திரு த. இ பாலசுந்தரம்
[தலைவர், லயன்ஸ் கழகம், கோப்பாய்]
திரு ந ஜெயவீரசிங்கம் [ஜெயமதி ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி]
திரு குழந்தைவேலு
திரு ச. அண்ணாமலை [அதிபர், கட்டுவன்புலம் மகா வித்தியாலயம்)
★ நன்றியுரை; பிரம்மஸ்ரீ ந. சதாசிவ ஐயர் [உபசெயலாளர், இ. ச, பேரவை]
★ தேவாரம்:

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

## இதுவே தர்மப்பணி

இந்து மக்களின் நலனைப் பாதுகாப்பதற்கு இந்து ஸ்தாபனங்களின் கூட்டமைப்பு இல்லாத குறையை இந்து சமயப் பேரவை இன்று தமிழ் நிலத்தில் முழுமையாகத் தீர்த்துள்ளதைக் கண்டு முழுமனதுடன் மகிழ்கின்றோம்.

இன்றைய போர்க்காலச் சூழ்நிலையில் தாய் தந்தையரை இழந்தது ஆறாத்துயரில் அல்லற்படும் சைவக் குழந்தைகளைத் தாங்கிக் கொள்ளும் பணியே தர்மப் பணி. இத்தகைய ஒப்பற்ற சீரிய பணிக்கு அனைவரும் ஆதரவு நல்க வேண்டுமென இந்து தர்மத்தின் பேரால் கேட்டுக் கொள்கின்றேன்.

**பண்டிதர்மு. கந்தையா**
ஆசிரியர், இந்துதர்மம்

## விழிப்புணர்வு உண்டாகுக

மத நிறுவனங்கள் கிரியை வழிபாட்டு முறைகளுக்கு மேலதிகமாக மக்கள் தேவைகளை இனம் காணுதல், அவர்களுடன் சேர்ந்து வாழ்தல், அவர்களின் குறைகளை நிவிர்த்தி செய்தல் என்பவற்றில் கூடிய அக்கறை செலுத்தி வருகின்றன.

இந்த அடிப்படையில் இந்து சமயப் பேரவையால் நடத்தப்பட்டு வரும் சைவச் சிறார் இல்லத்தின் கொடிவாரத்தை வாழ்த்துவதுடன், அதன்மூலம் இச்சைவச் சிறார்களுக்கும் இந்து சமூகத்துக்கும் நன்மை கிடைக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**செ. பத்மநாதன்**
திட்டமிடல் பணிப்பாளர், செயலகம்,

## அறம் வளர்க்க உறுதுணையாவீர்

அசைந்து உலாவும் இயல்புடைய யானைகள் தாம் பெற்று உண்ணும் ஒரு வாய் உணவினின்று ஓர் சிறிது சிந்திக் கீழே விழுந்தாலும் அதனால் அவை துன்பமோ நஷ்டமோ அடையமாட்டா. சிந்தப்பெற்ற அவ்வுணவு இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்வாழ்வனவான பட்சி, ஊர்வன போன்றவைக்கு தம் சுற்றத்துடன் கோடிக்கணக்கில் கூடி உண்டு பிழைத்து மகிழ உதவுகின்றன. இதேபோல் செல்வமுடையார்க்கு தமது பொருளிற் சிறிது குறைந்தாலும் அவர்களுக்கு சேடிலை. அதனால் பல கோடி உயிர் பிழைக்கும். தம்மையறியாமலே ஆற்றும் பெருந் தர்மமுமாக அது விளையும்.

சிறுசிறு துளிகள் பெருவெள்ளமாவது போல ஈழத்துச் சைவாபிமானிகள் ஆற்றும் சிவதர்மச் செயல்கள் அவை சிறிதாயினும் பெருவெள்ளமாகப் பரிணமிக்கும் தன்மை வாய்ந்தவை. தானதர்மங்களுக்கு ''இல்லை'' என்று சைவ ஏழைகள் கூடக் கூறமாட்டார்கள்.

சந்திரனது கிரணங்கள் வளர்ந்தும் தேய்ந்தும் ஏற்ற இறக்கத்தின் அளவாக அக்கிரணங்கள் அமைந்தது போல, அறம் செய்யும் சைவர்கள் வளர்ந்தும் குறைந்தும் காணப்படும் தமது செல்வத்திற்கமைவாக அன்போடு தருமம் செய்வர். இல்லையென்று கூறவே மாட்டார்.

அகதிகளுக்கு ஆக்கப்பணிகளும், சிவசிந்தனைகளுக்கு ஊக்கப்பணிகளும் அறம் செய்யும் பாங்கிற்கு ஆற்றுப்படுத்தலிலும் தர்மவிருத்திக்கு உறுதுணையாக விளங்கும் ''இந்து சமயப் பேரவையின் கொடிவாரத்தில் சகல சைவசமயிகளும் ஊக்கங்கொடுத்து உறுதுணை நின்று வாரி வழங்கி அறத்தால் பெறும் பெருஞ் செல்வங்களை பெற்றுய்வீர்களாக.

**மஹாராஜ ஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்**
மாவை ஆதீன கர்த்தா.

## பரந்து தழைத்தோங்குக!

ஈழம் வாழ் சைவச் சிறார்கள் உண்மையான சைவ சமயிகளாய் திகழ்ந்து யாண்டும் சைவ ஒளி பரப்பி ஏனைய சமயத்தைச் சார்ந்த சிறார்களுக்கு வழி காட்டிகளாகத் திகழவேண்டும், எனும் நோக்கில் இந்து சமயப் பேரவையினரால் கைதடி சைவச்சிறார் இல்லம் பராமரிக்கப்பட்டு வருவது பாராட்டுக்குரியது.

இவ் வில்லமும், இந்து சமயப் பேரவையும், பரந்து தழைத்தோங்கி நின்று நிலவ எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் திருவருளை வாழ்த்தி வணங்குவதுடன், இக் கொடி வாரத்துக்கு தம்மால் இயன்ற பொருள் உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

சைவப் பெரியார் சிந்தாந்த வித்தகர்
**திரு. மு. ஞானப்பிரகாசம்**
தலைவர், திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபை

## பேரவையின் பணி தொடர்க

இந்து சமயப் பேரவையால் நடத்தப்படும் சமய சமூகப் பணிகளை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவர்கள் ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைப் பேணுவதற்குக் கைதடி சைவச் சிறுவர் இல்லத்தை நடத்துகின்றனர். சைவஞான அறிவியல் விளக்கத்தை ஏற்படுத்த ''இந்து தர்மம்'' என்ற மாதாந்த சஞ்சிகையை வெளியிடுகின்றனர். அறிவியற் கருத்தரங்குகளையும் வேறும் இன்னோரன்ன பணிகளையும் மேற்கொள்கின்றனர்.

ஆதரவற்ற சைவச் சிறார்களை அரவணைத்து அவர்களுக்கு புகலிடம் அளித்து உண்டியும் உறையுளும் உடையும் கொடுத்துக் கல்வி அறிவூட்டி மேம்படுத்தி வருவது பாராட்டுக்குரியது. இன்றைய சூழ்நிலையில் இன்னும் இதுபோன்ற குழந்தைகளைப்பேண இந்து சமயப் பேரவை இத்தகைய இல்லங்கள் பலவற்றை தமிழ் நிலம் அடங்கலும் திறப்பது அவசியமானது.

இன்றைய சூழ்நிலையில் இத்தகைய இல்லத்தைப் பேணும்வகையிலும் அனாதைகள் ஆதரவற்றோருக்கு உதவும் வகையிலும் இன்று மார்ச் 10 தொடக்கம் 16ஆம் நாள் வரை நடைபெறவுள்ள கொடிவாரத்திற்கு அனைத்து மக்களும் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இந்துசமயப் பேரவையின் சீரிய பணிகள் மேலும் சிறப்பாகத் தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

**பேராசிரியர் க. குணரத்தினம்,**
துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்.

## நிதிசார்ந்து பலப்படுத்துவோம

இந்து சமயப் பேரவையினுடைய கொடிவாரத்தையொட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்துக்களாகிய எமக்கு இந்துசமயப் பேரவையின் பணிகள் மிக முக்கியமானவைகளாகும். முக்கியமாக இன்றைய சூழ்நிலையில் இன்னற்பட்டிருக்கும் எம் மக்களுக்கு தொண்டாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இப் பேரவைக்கு இருக்கின்றது.

ஆலய உற்சவங்கள், சமயச் சடங்குகள் போன்றவற்றில் நாம் காட்டும் அதே ஆர்வத்தை சமூகபணிகளிலும் காட்ட வேண்டும். இதன்மூலம் துன்புற்றவர்களுக்கு உதவுவதோடு எமது சமயத்தையும் வளர்க்கின்ற பணியை மேற்கொண்டவர்கள் ஆகின்றோம். இப்பாரிய பணிக்கு வாரி வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்வதுடன் இவர்கள் பணிகள் நின்று நிலைக்க எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரன் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

**வே. பொ. பாலசிங்கம்**
மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.
ஆட்சிக் குழு உறுப்பினர் [இந்து சமயப் பேரவை]


## இம்மலர் விரிய உரமிட்டு நீர் ஊற்றியோர்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பேரம்பலம் அன் சன்ஸ் | சிவன் மாடம் | குகன் ஸ்ருடியோ | வனிக்கா மெடிக்கல்ஸ் | திருமகள் அழுத்தகம் | தனலக்குமி புத்தகசாலை | வேலழகன் தொழிலகம் |
| சுன்னாகம். | யாழ்ப்பாணம். | பருத்தித்துறை. | யாழ்ப்பாணம். | சுன்னாகம். | சுன்னாகம். | சுன்னாகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

8 H. P. R. A. லிஸ்ரர் Water Cool என்ஜின் லிஸ்ரர் J. K. சிலின்டர் ஹெட் தொடர்பு: இந்திரன், ''யோக மாளிகை'', வல்லை வீதி, சங்கானை. (35600)

அடைவைக்க உகந்த செல்கி, பிறாமா, பாமாஸ், பாபடிக்கல்ஸ், சில்வர், போலிஸ் முட்டைகளும், 5 மாதக் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. யோ. மாறன், இல. 1, தவக்குமார் வீதி (தூபி அருகில்), சங்கத்தானை, சாவகச்சேரி, (8372)

இரு மாதங்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு கி. இராசதுரை, எச்சாட்டி, சுதுமலை தெற்கு, மானிப்பாய். (35595)

## விற்பனையாகின்றது

விற்பனையாகின்றது. புதிய வெளியீடுகள் புதிய பாடத்திட்டத்திற்கானது. புதிய விஞ்ஞானம் பாடப்பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8 9 10, 11 புதிய சமூகக்கல்வி பாடப் பொழிப்பும், தொழிற்பாடும் பயிற்சிகளும் ஆண்டு 6 7.8, 9, 10, 11 வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8374]

விற்பனையாகின்றது புதிய வெளியீடுகள் புதிய பாடத் திட்டத்திற்கானது நாமும் சுற்றாடலும் ஆண்டு - 2 தமிழ்மொழி ஆண்டு 1 - 2 (செயல் நூல்) தமிழ் மொழி மொழித் தேர்ச்சியும், இலக்கணமும் ஆண்டு 9, 10, 11 G C E. (O/L) தமிழ்மொழி அடிப்படை அறிவும் பயிற்சிகளும் ஆண்டு 6, 7, 8, 9 10, 11 வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். [8373]

## புத்தாண்டுப்பலன்

ஜோஸ்யரின் பங்குனிமாத சிறப்பிதழ் புத்தாண்டுப்பலன்களுடன் கல்வியியல் சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. பன்னிரு ராசிகளுக்கான பலன், கல்வி யாருக்கு அமையும். உயர்கல்வி யோகம் இன்னும் பல அரிய சோதிட தகவல்கள். விலை 6/- மட்டுமே. (35545)

## பயிற்சி வினாத்தாள்கள்

ஆண்டுகள் 3, 4, 5, 6, 7, 8, 9, 10, O/L, A/L க்குரிய எல்லாப் பாடங்களுக்குமான பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் அல்லது தபாலில் அல்லது பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். [8358]

## கோழிக்குஞ்சு விற்பனை

கோல்டன் கொமற் சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் 12-3-95 ஞாயிறு விநியோகிக்கப்படும். சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சு தேவையானவர்கள் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: சி. குலசிங்கம், இல. 9, றக்கா வீதி, யாழ்ப்பாணம். [35558]

## இலங்கு திருமண சேவை

39 வயது, பூசம் 4, செவ்வாயற்ற, கிரகபாவம் 44, Denmark பிரஜாவுரிமை உடைய மணமகன் யாழ். சைவர். தகுந்த மணப்பெண் தேவை. தொடர்பு: ஞாயிறு தி. விமலா, யாழ் நாச்சிமார் கோயிலடி. (35534)

34 விசாகம் 3 ஆம் பாதம், செவ்வாய் தோஷமற்ற பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு ஏற்ற பட்டதாரி மணமகன் வேண்டப்படுகிறார். மணமக்களே நேரடியாக நாடுங்கள் இலகு திருமண சேவையை ஞாயிறு தோறும் விமலா, நாச்சிமார் கோயிலடி. (35597)

## களவிறிவிட்டது

பரயாணப் பை ஒன்று பெறுமதிமிக்க பொருள்களுடன் உரப்பையில் வைக்கப்பட்டு 7-3-95 மாலை த 1 2510 இலக்கமுடைய காரில் இருந்து கிளாலி கச்சாய் வீதியில் விழுந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அ கிறிஸ்ரி, 176/4, பிரதான வீதி. யாழ்ப்பாணம் முகவரிக்கு தகவல் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (35592)

## புலமைப் பரிசில் - 95

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்காக பொது உளச்சார்பு, பொது அறிவு பயிற்சி வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு மாதமும் 2வது, 4வது ஞாயிற்றுக்கிழமையிலும் ஊக்குவிப்பு பயிற்சிகள் ஒவ்வொரு வாரமும் எம்மால் வெளியிடப்படுகின்றன. நேரில் / தபாலில்/ பிரபல புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். Bond, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (8357)

## மணமகன் தேவை

ரோகிணிநட்சத்திரம், செவ்வாய் குற்றமற்ற, புவியியல் விசேடசித்தி பெற்ற, இந்து, 35 வயது பட்டதாரி ஆசிரியைப் பெண்ணுக்கு 40 வயதிற்குட்பட்ட மணமகன் தேவைப்படுகிறார். முதற் கடிதத்திலேயே குறிப்பு உட்பட முழு விவரமும் எதிர்பார்க்கப்படுகிறது. இல 967, மே/பா உதயன். (சி 607)

## வாடகைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு தேவை தொடர்பு: இல. 765 மே/பா உதயன். யாழ்ப்பாணம். [35584]

## வீனஸ் அன்ரனா

T. V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல், T. V. டெக், றேடியோ, மணிக்கூடுகள் திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-396]

## பாலர் ஆசிரியராக

விரைவில் பயிற்சி க. பொ. த. [சா/த] கடைசித் தகைமை. சனி, ஞாயிறு சமூகம் தர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [8375]

## SPOKEN ENGLISH

Spoken English with Grammar விரிவான விளக்கத்துடன் கற்பிக்கப்படுகிறது. நேரங்களை வேண்டியபடி தரப்படும். V.N. Kandasamy A I B Part - I (London) Inter/Londan/Dip in English இலக்கம் 87, திருநெல்வேலி றோட், (ரயில் கடவைக்கு சமீபம்), கொக்குவில். (8376)

---

# சைன் மனையியல் கல்வியகம்

வீரமாகாளி அம்மன் ஆலயம் அருகில்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

பெண்களுக்கான
மனையியல் கைத்திறன் டிப்ளோமா பயிற்சிகள்
திங்கள், புதன் நாட்களில் நடைபெறும்

புதிய பிரிவு
**ஆரம்பம் 1 - 4 - 1995 சனி**
முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்

**பொருட்காட்சி**

காலம்: 11. 12 - 3 - 95 சனி, ஞாயிறு
காலை 9 மணி முதல மாலை 5 மணி
இடம்: கல்வி நிலையம

கேக் ஐசிங்
(STOCKINET, PANCLAY, DIPIN, SILK RIBBON)
தையல், கைப்பணி
புதுமை மிகக படைப்புக்களைப் பார்க்க தவறாதீர்கள்

(35560) — நிர்வாகி.

---

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
## விஜயலட்சுமி கயிலைநாதன்

தோற்றம்: 21 — 08 — 1956
மறைவு: 05 03 — 1990

திதி 10 – 03 – 1995

எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும், எம்மனதை விட்டகலுமோ உங்கள் நினைவு எம்மைவிட்டு நீங்கள் பிரிந்ததாக எண்ணவே முடியவில்லை, உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்,
குடும்பத்தினர்.
மகள (கோபிதா)

சேச் லேன்,
தாவடி.

(35599)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் எஸ். எஸ். கந்தையா

தோற்றம்: 22 — 05 — 1911
மறைவு: 19 — 02 — 1994

திதி: 10 — 03 — 1995

ஆண்டாண்டு சென்றாலும் ஆறாதையா எம் துயரம்
பாண்டவர் உன் மக்களும், பாசமிகு மனைவி
சோதரரும் - பூவுலகில்
ஆண்டவனை வேண்டுகின்றோம் அடுத்தடுத்த
பிறப்பெல்லாம்
ஐயாவாய், ஆருயிர் துணையாய், அண்ணனாய்
வருக வென்றே.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்களும், குடும்பத்தினரும்.

''யோக வாசா'',
11/7, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

[35598]

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 10 — 1952
மறைவு: 09 — 02 — 1995

## செல்வி அருந்ததி தியாகராசா

மாதம் ஒன்று உருண்டதம்மா!
ஆறிடுமோ எம் மனம்
பூவாய் உதிர்ந்தாய் அம்மா!

தகவல்:
தி. மங்களக்குமார்.

''லக்ஷ்மி வாசா'',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[35601]

---

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 18 — 07 — 1917
விண்ணில்: 02 — 03 — 1993

## திருமதி கனகமுத்து சின்னத்துரை

திதி: 10 – 03 – 1995 (வெள்ளி)

குடும்பத்தின் ஒளி விளக்கே,
பாசத்தின் உறைவிடமே,
மாண்டீர் என்பதை மறக்குதெம் மனம்
நாம் உயர வழி சமைத்து
ஏனம்மா எமைப் பரிந்தீர்
ஈராண்டு ஓடி மறைந்ததம்மா
ஈராயிரம் ஆண்டு சென்றாலும்
உம் நினைவு எமைவிடுமா கலங்குகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
என்றும் பிரார்த்திக்கும்;
மகள், மகன்மார்,
பேரப்பிள்ளைகள்.

சாவகச்சேரி.

[சி-736]

---

உவில்லியம் மேதர் ஞாபகார்த்த
பெண்கள் நிலையம்
மருதனார்மடம்

# 54ஆவது வருடாந்த விழா

இடம்: பெண்கள் நிலையம
காலம்: சனிக்கிழமை 11 — 03 — 1995
நேரம்: காலை 8-30 மணி ஆரம்பம்

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

செயலாளர்,
பெண்கள் நிலையம்.

[8275]

---

# இலவச மருந்தாளர் பயிற்சி வகுப்பு ஆரம்பம்

வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தினரால் நடத்தப்படும் இலவச மருந்தாளர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை மருத்துவம் பத்திரிகையில் வரும் விண்ணப்பப்பத்திரத்தை வெட்டியனுப்புக. தங்களால் தட்டச்சு செய்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

செயலாளர்,
யாழ். ஆங்கில மருந்து
வர்த்தக சங்கம்.

[சி-614]

---

இராசகிராமம்
சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா
அபிவிருத்தி நிதிக்கான

# மாபெரும் கலை விழா

இடம்: நெல்லியடி
மத்திய மகா வித்தியாலயம்
காலம்: 16 — 03 — 1995 மாலை 7 மணிக்கு

## நிகழ்ச்சிகள்

அருணா, சாந்தன, ராஜன் இசைக் குழுவினர்
இணைந்து வழங்கும்
**"இன்னிசை கான மழை"**
கோப்பாய் சுதேச கலாமன்றம்
வழங்கும்
**"அவள் ஒரு மாதிரி"**
**"ஆவினில் இனியவள்"**
(நாடகங்கள்)

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

சரியான பாதையில் இளம் சமூகத்தை வளர்த்துச் செல்லும் பணி இன்றைய சமூகத்தின் கைகளிலே உண்டு.

அபிவிருத்திக் குழு,
இராசகிராமம்.

[35586]

---

தற்கால டிசைன்களில்

உங்கள் மனதிற்கேற்ற வகையில் நகைகளை சிறந்த முறையில் செய்பவர்கள், நகைத் துறை வரலாற்றில் மிகுந்த அனுபவம் மிக்கவர்கள். நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்திற்கு ஒரே ஸ்தாபனம்

மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

# கந்தசாமியும் மைந்தர்களும்

நகை வியாபாரம்
206, காங்கேசன் சாலை,
யாழ்ப்பாணம்.

[சி-615]

---

13ஆம் ஆண்டு
# நினைவஞ்சலி



தோற்றம்: 24 — 10 — 1918
மறைவு: 10 — 03 — 1982

அமரர்
## வல்லிபுரம் பொன்னுத்துரை
[இளைப்பாறிய புகையிரதநிலைய அதிபர்]

பாசத்தோடும் நேசத்தோடும் எமை உருவாக்கி எமை விட்டு நீங்கி பல ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், நினைவிலே நிலைத்து நின்று எமை வாழ்த்தும் தெய்வமே! உங்கள் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''வசந்தகிரி''
மயிலிட்டி.

[35503]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சமூகப் பணிக்கு திரும்புவதுஎப்போது?

அறம் செய்ய விரும்பு.

இது தமிழ்ப்பெரு மூதாட்டி ஔவை தந்த ஆத்திசூடியின் முதலாவது அறநெறி வாசகம்.

அந்த வாசகத்தின் கருத்தென்ன? தர்மம் செய் என்பதே அதன் அர்த்தம் என்றல்ல. தர்மம் செய்வதற்கு ஆவலோடு இருப்பாயாக; தர்மம் செய்வதற்கான காலம் இப்போது இடையாதா என்று எப்போதும் காத்திரு என்பதாகும்.

தர்மங்களில் மிகச் சிறந்ததும் உயர்ந்ததும் தானமே. அதிலும் வசதியற்றவனுக்குச் செய்யும் தானம் ஒப்புயர்வற்றது.

இந்து தர்மத்தின் மிக அடிப்படையான வாழ்க்கை நெறிகளில் ஒன்றான தானம் அன்றாட வாழ்வில் ஓர் அங்கமாக வேண்டியது. இல்லாதவனுக்கு, ஈவதற்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இயன்றவரை, அவரவர் இயல்புக்கு ஏற்றவரை, கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரின் உலகியல் கடமையாகிறது.

இந்தக் கடமையைச் செய்வதற்கு இன்று தொடக்கம் எதிர்வரும் வியாழக்கிழமை வரை சைவச் சிறுவர் இல்லத்தை நடத்தும் இந்து சமயப் பேரவையினர் சைவப் பெருமக்கள் எல்லோருக்கும் நல்லதொரு சந்தர்ப்பத்தைத் தந்திருக்கிறார்கள்.

தாய் தந்தையரை இழந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட சிறுவர்களைப் பராமரித்து அவர்களை எதிர்காலத்தின் நற்பிரசைகளாக வளர்க்கும் பெரும் பணியில் ஈடுபட்டிருக்கும் இப் பேரவையினர் நடத்தும் கொடி வாரத்தில், ஒவ்வொரு இந்துவும் தன்னால் இயன்ற பொருள் உதவி வழங்க வேண்டும்.

தமக்குள்ள இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளைப் பராமரித்து, வளர்த்து, கல்வியூட்டிப் பெரியவர்களாக்குவதற்குப் படும் கஷ்டங்களையும், சிரமங்களையும் ஒவ்வொரு பெற்றோரும் நன்கறிவர்.

ஐம்பது பிள்ளைகளைப் பராமரித்து வளர்ப்பது எத்தகைய பொறுப்பான பணி என்பதனை எவரும் ஊகித்துப் பார்க்கலாம்.

இடரும், இன்னலும் சூழ்ந்த இந்நாளில், அனாதரவான பிள்ளைகள் ஊருக்கு ஊர் எத்தனையோ பேர் இருப்பார்கள். வசதி குறைந்த தாய் தந்தையர்களின் பராமரிப்பில் உள்ள பிள்ளைகளுக்கும் உணவு, உடை, கல்வி வசதி கிடைக்காமையும் உண்டு. இவர்கள் எல்லோருக்கும் உதவி, கைகொடுத்து, அவர்களை வாழ்க்கையில் தூக்கி விடுவது இந்தச் சமூகத்தின் பொறுப்பாகும். அது வேறு எந்த வெளியாரினதும் அல்ல.

இந்து சமயப் பேரவை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், துர்க்கா மகளிர் இல்லம், செஞ்சோலை மற்றும் பல சிறுவர் இல்லங்கள் இந்தத் தொண்டைச் சிறப்பாகச் செய்து வருகின்றன. இவை போன்று கிராமத்துக்குக் கிராமம் சிறுவர்கள், அனாதைகளுக்கான இல்லங்களை அமைக்க வேண்டிய தேவை உருவாகியுள்ளது.

இங்கு வாழும் சைவப் பெருமக்களைப் பொறுத்தவரையில், ஆலயங்களில் திருவிழாக்களுக்கும், வேடிக்கைகளுக்கும் செலவிடப்படும் பணத்தைக் குறைத்து இத்தகைய அறப்பணிகளைச் செய்யவேண்டும்.

பொதுவாக இப்போது சைவ ஆலயங்களில் மிகப் பெரும்பாலானவற்றுக்கு வருமானத்திற்குக் குறைவில்லை. வருமான அதிகரிப்பால் நிர்வாகத்தைக் கைப்பற்ற அடிபிடி, குடுமிச் சண்டைகள் 'இயல்பு நிலை' ஆகிவிட்டன. ஆலயம் என்றால் என்ன என்ற மூலக் கருத்தையே மறந்து பிணக்குகள், வழக்குகள் பெருகிவிட்டன.

ஆலயங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை சமூக அறப்பணிகளுக்கு என்று ஒதுக்கினால் ஊர்தோறும் சிறுவர் இல்லங்களையும், வசதி குறைந்தோருக்கான பணிகளையும் நடத்துவது ஒன்றும் கஷ்டமாகிவிடாது.

ஆலயங்களே கல்விச்சாலைகள், வைத்தியசாலைகள், கலைக்கூடங்களை நடத்திய, சமூகப்பணி செய்த, காலத்துக்கு நாம் திரும்புவது எப்போது?

# புலிகள் உட்பட தமிழ்க் கட்சிகளுடன் பேச முஸ்லிம் காங்கிரஸ் முயற்சி

## துணைத் தலைவர் மருதூர்க்கனி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 10

விடுதலைப் புலிகளுடனும் ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தும் முயற்சிகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஈடுபட்டு வருவதாக — அதன் மூத்த துணைத்தலைவர் மருதூர்க்கனி தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு இணைப்புக்குள் முஸ்லிம்களது சுயாட்சியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யக்கூடிய தீர்வையே அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான தெரிவுக் குழுவிடம் தமது கட்சி சமர்ப்பிக்கும் என்றும் —

— அதற்கு முன்னதாக புலிகளுடனும், தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்த தமது கட்சி முயன்றுள்ளதாகவும் — அவர் தெரிவித்தார்.

வட - கிழக்குப் பிரச்சினை தொடர்பாக எடுக்கப்படும் எந்த ஒரு தீர்வும் முஸ்லிம்களையும் திருப்திப்படுத்துவதாக அமைய வேண்டும்; அவ்வாறு அமையாவிட்டால் வடக்கு - கிழக்கு மாகாண சபை மற்றும் இலங்கை- இந்திய ஒப்பந்தம் போன்றவை கண்ட தோல்விகளையே சந்திக்க நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

[ஐ-5]

### கப்பல்துறை மாதிரி கிராம திறப்பு விழாவுக்காக

# திருமலை செல்லுமுன் ஜனாதிபதியை பாதுகாப்பு உயர்பீடம் எச்சரித்தது!

கொழும்பு, மார்ச் 10

திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே கடலில் 32 விடுதலைப் புலிகளுடன் சென்று கொண்டிருந்த படகு ஒன்று கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டதை அடுத்து, கப்பல்துறை மாதிரிக் கிராமத் திறப்பு விழாவுக்கு போகவேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பாதுகாப்பு உயர் தலைமை ஆலோசனை வழங்கியதாகவும் —

அமைச்சர் மங்கள சமரவீராவும் பிரதமரின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவும் கப்பல் துறைக்கு விஜயம் செய்து நிலைவரத்தைப் பார்வையிட்ட பின்னர், கப்பல்துறைக்கு ஜனாதிபதி பாதுகாப்பாக வந்து போகலாம் என்று ஆலோசனை வழங்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அதனை அடுத்து, மூன்றரை மணித்தியாலங்கள் கழித்து ஜனாதிபதி கப்பல் துறைக்கு விஜயம் செய்து மாதிரிக் கிராமத்தைத் திறந்துவைத்தார்.

விடுதலைப்புலிகளின் படகு இடைமறிக்கப்பட்ட சமயம் கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரா திருமலையில் தங்கியிருந்தார் என்றும் —

படகை கடற்படையினர் தங்கள் தளத்துக்கு எடுத்துச் சென்று அதில் இருந்தவர்களை விசாரணை செய்தனர் என்றும் —

உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர், கடற்படையினர் விடுதலைப்புலிகளைப் படகுடன் வாகரைக்கு அழைத்துச்சென்றனர் என்றும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' தகவல் வெளியிட்டிருக்கிறது.

வாகரையிலிருந்துமுல்லைத்தீவு நோக்கி விடுதலைப்புலிகளின் படகு நகர்ந்து கொண்டிருந்தபோதே அதனை கடற்படையினர் இடைமறித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி தமது அதிகாரிகள், அமைச்சர்களுடன் திருமலைக் கடற்படைத் தளத்தை வந்தடைந்த போதே இச்சம்பவம் இடம்பெற்றது. [ஐ-எ]

## கிளாலியூடாக கருவாடு

தென்மராட்சி, மார்ச் 10

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து தென்னிலங்கைக்கு கருவாடுகள் அனுப்பப்படுகின்றன. தற்போது பெருமளவு கருவாட்டுப்பொதிகள் கிளாலியூடாக கொழும்புக்கு அனுப்பப்பட்டுவருகின்றன.

கடல் வலயத்தடுப்புச் சட்டம் தளர்த்தப்பட்டதை யடுத்து, பெருமளவு மீன்கள் மீனவர்களால் பிடிக்கப்பட்டு வருவதால் கருவாட்டின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது.

(க-117)

## சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 10

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்தப் பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

(ஐ-5)

# மலையக சிங்கள குடியேற்ற பின்னணியில் அமைச்சர்

## தமிழ்க் கட்சிகள் மௌனம் சாதிப்பது ஏன்

மலையகத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த சிங்களக் குடியேற்றங்கள் தற்போது மேலும் தீவிரமாக அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந் நடவடிக்கைகளின் பின்னணியில் பொ. ஐ. முன்னணியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான ஒருவரே இயங்கி வருகின்றார் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது;-

தற்போது கரவனல்ல, பொகவந்தலாவ - டெவன் போட், நோர்வூட் போன்ற மலையகப், பிரதேசங்களில் வேகமாக சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பாக மலையக அரசியல் கட்சிகள் அசட்டையாக செயல்படுகின்றன; அரசுடன் இணைந்து செயல்படும் மலையக மக்கள் முன்னணிக் கட்சியோ, அல்லது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியோ இது தொடர்பாக, சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள தயக்கம் காட்டி வருகின்றன என பலமான குற்றச்சாட்டு கிளம்பியுள்ளது.

இக்கட்சிகள் இது தொடர்பாக இதுவரை எதுவித பத்திரிகை அறிக்கைகளைக் கூட வெளியிடாமல் இருப்பது இச் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

### பாதை விஸ்தரிப்பு

கொழும்பு - ஹட்டன் வீதி விஸ்தரிப்புத் திட்டம் ஒன்று தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத் திட்டம் புலத்கொஹிபிட்டிய [வெற்றிலையூர்] விலிருந்து ஹட்டன் வரையான பெருந்தோட்டப் பகுதிக்குள்— தெஹியோவிட்ட, கரனெல்ல, பிட்டவல, கித்துள்கல, கினிகத்தேன, வட்டவல ஆகிய பகுதிகளின் ஊடாக — மேற்கொள்ளப்படுகிறது.

### சிங்களவர் ஆக்கிரமிப்பு

இந்தப் பாதை விஸ்தரிப்பைச் சாட்டாக வைத்து கரவனெல்லவில் இருந்து பிட்டிவலவரையுள்ள பாதையின் இரு மருங்கிலும் அமைந்திருந்த தமிழர்களின் குடியிருப்புகள் அகற்றப்பட்டன; இன்று அந்த இடங்களை ஐநூறு சிங்களக் குடும்பங்கள் ஆக்கிரமித்துவிட்டன.

கரலினா, கண்ணியப்ப முதலிய தோட்டக்காணிகளும் இரண்டாயிரத்து மேற்பட்ட புதிய சிங்களக் குடியேற்றவாசிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன; இங்கு வீடுகள் மாத்திரமன்றி கடைகளும் கட்டப்பட்டு அவை சிங்களவரின் நிரந்தரக் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருகின்றன.

எவ்வாறெனினும், பாதை விஸ்தரிப்பையும் மீறி ஏற்படுத்தப்பட்டு வரும் இந்த சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராக தோட்ட நிர்வாகமோ, அரசாங்கமோ அல்லது பொலீஸோ இது வரை எதுவித சிறிய எதிர் நடவடிக்கையைக் கூட எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### பெரும்பான்மையினர் குடியேற்றம்

பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தஅமைச்சரின் பின்னால் இக் குடியேற்றங்கள் நிகழ்த்தப்படுவதால் —

பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இவ்விடயம் தொடர்பாக எடுக்கும் எந்தவித நடவடிக்கைகளும் நாளடைவில், இனமோதல்களை ஏற்படுத்திவிட்டால், அதனை சாட்டாகப் பயன்படுத்தி இராணுவமும், பொலீஸும் தலையிட்டு வழமை போல் அந்நிலங்களை பெரும்பான்மையினர் சார்பாக பகிரப்பட்டகூடிய சாத்தியங்கள் பெருமளவில் காணப்படுகின்றன.

இதைவிட 1988-89 காலப்பகுதிகளில் பொகவந்தலாவ, டெவன்போட் பகுதிகளில் குடியேறிய பெரும்பான்மை இனத்தவர்களில் ஒரு பகுதியினர், தமிழர்களின் பெரும் எதிர்ப்பின் காரணமாக, வேறு எதுவும் செய் முடியாத நிலையில் பொலீஸாரால் வெளியேற்றப் பட்டனர். எனினும் பலர் இன்னமும் வெளியேறவில்லை.

இந் நிலையில், தற்போது இத்தோட்டத்தை 30 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

இவையும் சிங்களவர்களுக்கே அளிக்கப்பட இருப்பதை தெரிந்துகொண்ட தமிழர் மிகவும் பீதிக்குள்ளாகி இருக்கின்றனர்.

### மேலும் ஒரு சிங்களக் கிராமம்

மலையகத்தின் வட்டவளை பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையை அண்டிய பகுதிகளிலும் குடியேற்றக் கிராமம் ஒன்றை அமைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த ஆடைத் தொழிற்சாலையின் தொழில்வாய்ப்புக்கள் பெரும்பாலும் சிங்கள சமூகத்தினர் வசம் உள்ள நிலையில், புதிதாக அமைக்கப்படும் கிராமத்தையும் அவர்களே, ஆக்கிரமித்து விடுவர் என அப்பகுதித் தொழிலாளர் அஞ்சுகின்றனர்.

இதேபோன்றே 1974ஆம் ஆண்டில் தமிழர்களுக்கென பகிர்ந்தளிக்கப்பட்ட நோர்வூட் காணியிலிருந்து தமிழர்களை வெளியேறும்படி 1992 இல் பொலீஸார் கட்டளையிட்டனர்.

அதைஏற்க மறுத்த தொழிலாளர்களை பொலீஸார் தடியடிக்கு ஆளாக்கி, ஹட்டன் மாவட்ட நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்தனர்.

இவ் வழக்கு இன்னமும் முடிவுக்கு வராத நிலையில், சிங்களவர் இக்காணியில் வீடொன்றைக் கட்டியுள்ளார். (ஒ-5)

## புலிகளின் குரல் வானொலியில்

10 — 03 — 1995
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி— நிகழ்ச்சியில் அறிமுகம். அறிமுகமாவது ''விளக்கு'' சஞ்சிகை; சிறுகதை— மலரன்னை எழுதிய ''துணை''; கவிதை— ஆர்த்தி எழுதிய ''தமிழ்மண்''
★ 8-25 — கணப்பொழுது — சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் பிரபா''
★ 8-30—செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம்— வே. பாலகுமாரன் எழுதிய ''உருக்குலைந்த றுவாண்டாவிற்கு உதவத்தயங்கும் உலகம்''
★ 8-50 — வாத்தியகானங்கள்.

11— 03 — 1995
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வெள்ளி மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — கணநேரக்காவியங்கள்
★ 5-30 — மண்ணின் குரல்
★ 5-40 — நேயர் கடிதங்கள்
★ 5-45 — வெற்றிச் சுவடுகள்
★ 6-00— சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — நாடகம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு
★ 6-30 மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்

## இன்று

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை ஆதரவில் நடைபெற்றுவரும் வாராந்த நிகழ்வுகளில், இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு இசைமணி சிற்றம்பலம் சிவஞானராசாவின் இசைக்கச்சேரி இடம்பெறும்.

அறிமுகவுரையை திரு. சி. துரைராசா வழங்குவார்.

★ ★ ★

யாழ். திருமறைக் கலாமன்ற பிரதான வீதி கேட்போர் கூடத்தில் இன்று மாலை 5 மணிக்கு பண்பாட்டு கருத்தரங்கு இடம்பெறும்.

செல்வி நா. விமலாம்பிகை பண்பாடு பற்றி கருத்துரை வழங்குவார். [ஐ-14-51]

★ ★ ★

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் ஒழுங்கு செய்துள்ள நல்லொழுக்கப் பிரசாரக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2- 30 மணிக்கு சித்தன்கேணி விநாயகர் நல்லொழுக்க சங்கத்தில் நடைபெறும்.

சங்கச் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் 'நல்லொழுக்க சங்கங்களும், கிராமங்களும்', 'போதையும் துர்ப்பாவனையும்', 'சமூக முன்னேற்றமும் கல்வியும்' என்னும் விடயங்களில் கருத்துரைகள் இடம்பெறும். (ஐ-14)

## தொலைக் கல்வி ஆசிரியருக்கு

கோப்பாய் தொலைக் கல்வி நிலைய பயிற்சி ஆசிரியர்களுக்கான மொடியூல் விநியோகம், நாளை சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12மணிவரை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் 91-93, 92-94, 93-95 பிரிவுக்கான செயல்முறை அமர்வும் அங்கு நடைபெறும் ஐ-5

## பிரியாவிடை

சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் கடமையாற்றி, தற்போது ஓய்வுபெற்றுச் சென்றுள்ள அதிபர் திரு. க. சிவபாதசுந்தரத்திற்கு அண்மையில் பிரியாவிடை வைபவம் நடத்தப்பட்டது.

இவ் வைபவத்தில் பாடசாலையின் தற்போதைய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

### ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி

# ஐ. தே. கட்சியினரின் வான் பொலீஸாரால் சோதனை!

கொழும்பு, மார்ச் 10

மாத்தளை மாநகர சபை காரியாலயத்திற்கு முன் நிறுத்தப்பட்டிருந்த ஐ. தே. கட்சியினரின் 'ஹைஏஸ்' வான் ஒன்று அதனுள் ஆயுதங்கள் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் சோதனையிடப்பட்டது.

கடந்த வாரம் நடைபெற்ற ஐ. தே. கட்சி செயற்குழு கூட்டத்திற்கு வந்திருந்த குழுவினரின் வானே இவ்வாறு சோதனையிடப்பட்டது.

வானினுள் ஆயுதங்கள் இருப்பதாக இனந்தெரியாத நபர்கள் மாத்தளை பொலீஸாருக்கு தகவல் கொடுத்ததை தொடர்ந்து, பொலீஸார் அவ்விடத்திற்கு விரைந்து சென்றனர்.

பொலீஸார் வானை சோதனையிட முயன்ற சமயம் உயர் பொலீஸ் அதிகாரி ஒருவரின் முன்னிலையிலேயே வாகனத்தை சோதனையிட வேண்டும் என்று மாத்தளை நகர பிதா ரஞ்சித் அலுவிகார கேட்டுக்கொண்டார்.

அதனையடுத்து மாத்தளை மாவட்ட உதவி பொலீஸ் அதிபர் தலைமையிலான பொலீஸ் குழு அந்த வானை பரிசோதித்தது; ஆயினும் அந்த வாகனத்துள் எதுவித ஆயுதங்களும் இருப்பது கண்டு பிடிக்கப்படவில்லை.

### வடக்கு - கிழக்கு யுத்த முனையில்

# 3 ஆண்டுகள் பணியாற்றிய படையினருக்கு இடமாற்றம்

## அமைச்சர் அனுருத்த உத்தரவு

கொழும்பு, மார்ச் 10

யுத்த முனைகளில் 3 வருடங்களுக்கு மேல் கடமையாற்றியுள்ள படையினர், அவர்கள் விரும்பும் பட்சத்தில் வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான பணிப்புரையை பிரதி பாதுகாப்பு அமைச்சரும், நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த விடுத்துள்ளார்.

அண்மையில் வடக்கு- கிழக்கு பகுதிகளிலுள்ள பாதுகாப்பு படை முகாம்களுக்கு விஜயம் செய்த அவர் படைத் தலைவர்களுக்கு இப்பணிப்புரையை விடுத்தார்.

வடக்கு - கிழக்கு யுத்த முனைகளில் கடமையாற்றும் பாதுகாப்புப் படையினரின் உடனடித் தேவைகள் மற்றும் வசதிகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்றும் —

இடமாற்றத் திட்டங்கள் தயாரிக்கப்படும்போது, வடக்கு - கிழக்கில் பல வருடங்களாக கடமை புரியும் படையினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் மேலும் அவர் தெரிவித்தார்.

# ராணுவ தொண்டர் படை கலைக்கப்படமாட்டாது

## இப்படி கூறுகிறார் அனுருத்த

கொழும்பு, மார்ச் 10

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் சமாதான உடன்பாடு ஒன்றை அரசு கண்டாலும், இராணுவத் தொண்டர் படையைக் கலைக்கும் எண்ணம் அரசுக்கு கிடையாது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த முன்கண்டவாறு தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தில் நிலை கொண்டுள்ள படையினர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணப் பட்டவுடன் இராணுவத் தொண்டர் படை கலைக்கப்படும் என்ற வதந்தியை பிரதி அமைச்சர் நிராகரித்தார்.

சமாதானம் வந்தவுடன் படையினர் வேறு விதமாக தங்கள் பங்களிப்பை வழங்கலாம் என்றும் அபிவிருத்திப் பணியில் நிரந்தரப் படை தொண்டர்படை ஆகியன ஈடுபடலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

(ஒ-எ)

# முருகன் அருள் பெற்று புராணம் பாடிய கச்சியப்பர்

யாழ்ப்பாணத்தவர் கந்த புராணம் எங்கள் புராணமெனப் பேசுவர். கந்த புராண கலாசாரம், கந்த புராண நவநீதம் என்னும் நூல்கள் யாழ்ப்பாணத்தில் வெளியிடப் பெற்றவை. கந்த புராணம் படனஞ் செய்தல் மிகப் பழைய யாழ்ப்பாண கலாசாரம். கந்தபுராணத்தைத் தந்த சுவாமிகளை நினைவு கூர்ந்து குருபூசைத் தினத்தில் சுவாமிகளை வழிபடுதல் அருள் பாலிப்பதாகும்.

### ஞானக்கதிர்

குருபூசைத் தினங்களில் சமயகுரவர்களை பூசிப்பது சாலச்சிறந்த வழிபாடாகும். இவ் வழிபாடுகளால் எச்சமயத்தோரும் நன்மை பெறுகின்றார்கள்.

கந்தபுராணத்தை எமக்குத் தந்தருளிய கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளின் குருபூசைத் தினம் இன்று நிகழ்கின்றது.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் காஞ்சிக் குமர கோட்ட சிவாசாரியர்கள் மரபில் வந்தவதரித்தவர்கள். கந்தப் பெருமானின் அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க கந்தபுராணத்தைப் பாடியருளினார்கள்.

முருகனின் அருள் பெற்றே இப் புராணத்தைப் பாடியருளினார்கள். இக் காலத்தில் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் பலர் கந்தபுராணத்தைப் பாட விரும்பியும் இவர்களுக்கு இது கிட்டவில்லை. இவர்களில் ஒருவர் இராமாயண ஆசிரியரான கம்பனெனவும் முருகனின் அருளின்மையால் அவருக்கு இது கிட்டவில்லை என்பதும் வரலாறு கூறும்.

கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளுக்கு முருகனின் திருவருள் கிடைத்தது. கந்த பெருமானே சுவாமிகளுக்குத் தரிசனங் கொடுத்து

''திகட சக்கரச் செம்முக மைந்துளான''

என்ற அடி எடுத்துக் கொடுத்துப் புராணம் ஆரம்பமாகியது ஒன்று.

அடுத்ததாக பெருமானின் சந்நிதியில் பாடி வைக்கப் பெற்ற பாக்கள் திருத்தப்பட்டிருந்தமை இரண்டாவது. மூன்றாவதாக, அரங்கேற்றுச் சபையில் ''திகட சக்கர'' என்பதின் இலக்கண பொருத்தமின்மையை ஆட்சேபித்த வித்துவான்கள் முன்னிலையில் வீரசோழியமென்ற இலக்கண நூலுடன் சபையோர் முன்னிலையில் எழுந்தருளி இலக்கணப் பொருத்தங் காட்டி மறைந்தமையுமாகும்.

இவற்றுடன் கந்தபுராணத்தில் காப்பிய புராண அமைப்பு செவ்வனே உள்ளமை அறிஞர்களால் விரித்துரைக்கப்பட்டுள்ளது. கடவுள் வாழ்த்துக்களுடன், பாயிரம், நாட்டு நகர் சிறப்புப் பாடல் முதலியன சிலவாகும். இவற்றைத் தொடர்ந்து புராண நடையின் ஆற்றோட்டம், தத்துவங்களின் அமைப்புகள், வேள்விகளின் சிறப்புக்களும் அவற்றின் பயன்களும், தான தர்மம், ஆத்ம தரிசனம், சிவன் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் முறை, முத்திப் பேறு போன்ற உயர் இலட்சியங்களை இங்கு காண்கின்றோம். ''கந்தபுராணத்தில்லாதது எந்தப் புராணத்திலுமில்லை'' என்பது சான்றோர் வாக்குமாகும்.

**டாக்டர் நா. கனகரத்தினம்,**

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலிஸ்தான் தீவிரவாதிகள் புலிகளுடன் தொடர்பா?

## இந்திய புலனாய்வாளர் விசாரணை

புதுடில்லி, மார்ச். 10
இந்தியாவின் காலிஸ்தான் விடுதலை முன்னணியுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்பு கொண்டு இருக்கலாம் என்ற சாத்தியம் குறித்து பொலீஸ் புலனாய்வாளர்கள் விசாரணை செய்து வருகின்றார்கள்.

'பிங்' நகரின் புறநகர்ப் பகுதியில் இருந்த காலிஸ்தான் விடுதலை முன்னணியின் மறைவிடம் ஒன்றிலிருந்து பெருமளவிலான 'ஆர் டி. எக்ஸ்' ரக வெடிமருந்து, தொலைவிலிருந்து இயக்கும் இயந்திரங்கள், சக்தி வாய்ந்த தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் பெருமளவிலான நவீன ஆயுதங்களும் வெடி மருந்துகளும் கண்டு பிடிக்கப் பட்டமையும்—

தொடர்ந்து, சென்னையிலுள்ள பெண் ஒருவருடன் உள்ள தொடர்பை வெளிப் படுத்தும் கடிதங்கள் கைப் பற்றப்பட்டமையும்—

விசாரணையாளர்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப் பியுள்ளன என்றும்—

பிரஸ்தாப பெண் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பைச் சார்ந்தவராக இருக்க லாம் என்ற சந்தேகம் குறித்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

அஜ்மீரி என்னுமிடத்தில் வசிக்கும் பெண் ஒருவரின் பெயரைக் கண்டுபிடித்த விசாரணையாளர்கள் அவரி டமிருந்து, காலிஸ்தான் விடு தலை முன்னணியினர் நேர டித் தொடர்புகளை பெற்று வந்ததை அறிந்து கொண் டுள்ளனர்.

அஜ்மீரிலுள்ள வீடொன் றில் தமிழ் அமைப்பு ஒன் றின் சிரேஷ்ட தலைவர் ஒருவர், பலத்த பாதுகாப்புடன் அண்மைக் காலம் வரை வசித்து வந்தார் என்றும்—

ஜம்மு – காஷ்மீர் விடுதலை முன்னணியுடன் தொடர்பு களைக் கொண்டுள்ள ஒருவர் தனிப்பட்ட காரணங்களுக் காக ஜெய்ப்பூர் மற்றும் அடி மலைத் தொடர்ப் பகுதி களுக்கு தொடர்ந்து சென்று வருகிறார் எனவும் மாநில புலனாய்வுப் பணியக வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை—

ராஜஸ்தானை தமது மறை விடமாக அல்லது தாக்குதல் நடத்துவதற்கான ஒரு தள மாகபயன்படுத்தகாலிஸ்தான் விடுதலை முன்னணியோ ஜம்மு—காஷ்மீர் விடுதலை முன்னணியோ அல்லது தமி ழீழ விடுதலைப் புலிகள் அமைப்போ முனைகின்றனவா என்று பாதுகாப்பு அமைப் புகள் ஆராய்ந்து வருவதாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

அருட்கலாநிதி

**டொனால்ட் கனகரட்னம்**

[கர்த்தருக்குள் நித்திரையடைந்த யாழ். ஆர்ச் டீக்கன்] அவர்களின்

வாழ்வுக்கும் சாட்சிக்கும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் ஆராதனை.

காலம்: 11-03-95 சனிக்கிழமை
நேரம்: மாலை 4 மணிக்கு
இடம்: சுண்டுக்குளி பரி யோவான் ஆலயம்.

அருட்பிதாக்கள், இறைமக்கள், அன்பர்கள் யாவரும் அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்,
J. C. M. A.

(சி.741)

---

## மரண அறிவித்தல்கள்

**தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம்**
**(இளைப்பாறிய கிராமசேவையாளர்)**

கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சாவகச்சேரியை புகுந்த இடமாகக் கொண்டவருமான தாமோதரம்பிள்ளை சிவபாதசுந்தரம் 9-3-95 (நேற்று) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி தாமோதரம்பிள்ளையின் அன்புமகனும், திருமதி தெய்வீகராணி சிவபாதசுந்தரத்தின் (இளைப்பாறிய ஆசிரியை றிபக் கல்லூரி, சாவகச்சேரி) பாசமிகு கணவரும் ஏகபுதல்வி சியாமாவின் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி) அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற மெய்ஞானசுந்தரம் (இளைப்பாறிய சிறாப்பர், இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), திருமதி பராசக்தி காளிதாசன் ஆகியோரின் சகோதரரும், திருமதி செல்வரெட்டினம் இராஜகோபால், காளிதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சிவபாதசுந்தரம் (மனைவி)
93/2 இந்து மகளிர் ஒழுங்கை
சங்கர்மடம்
[35603]

**மரியாம்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளை**
**(தம்பிஐயா)**

மாரீசன் கூடலைப் பிறப்பிடமாகவும், இடம் பெயர்ந்து பருத்தித்துறையில் வசித்து வந்தவருமாகிய ம. செபஸ்தியாம்பிள்ளை [தம்பிஐயா] அவர்கள் நேற்று காலமானார்.

இவர் மரியம்மாவின் அன்புக் கணவரும், காலம் சென்ற மரியதாஸ் (ராசா), மற்றும் ஜோஜ் சவரிமுத்து (சின்னத்தம்பி), கிருபைராஜா, இரத்தினம் (கொழும்பு) மரியறோஸ் (Holland), கருணாகரன் (England), ஞானமலர் (Denmark), யோகராஜா (Germany), ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், பஞ்சவர்ணம் செல்வம், கமலா [விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலை], மலர், காலஞ்சென்ற அருமைத்துரை மற்றும் மரியதாஸ் [Holland], ஜெயமலர் England), ஜெயபாலன் (Denmark], டொறின் [Germany] ஆகியோரின் அருமை மாமனாரும் அருளப்பு காலஞ்சென்ற ஆரோக்கியம் மரியாம்பிள்ளை, மற்றும் செபமாலை, திரேசம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

இவரது நல்லடக்கம் இன்று [10-3-'95] வெள்ளிக் கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை புனித தோமையார் சேமக்காலையில் நடைபெறும் உறவினர் நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
செ. சவரிமுத்து
(மகன்)
நியூ சிற்றி பேக்கறி அருகில்,
பருத்தித்துறை
[35605]

---

## OBITUARY

**MRS. GRACE PUSHPAM SATHASIVAM**
(Retired Teacher Royal Junior)

Beloved Wife of late Mr Sathasivam. Daughter of late Mr / Mrs M S Nalliah of Uduvil Sister of late Thevakirupai - Selvaratnam, Sister Arul malar - C. P. M. Suhitham, Uduvil, late Thevasundaram, Aunt of T. Selvaratnam Singapore, Suganthaselvini (U S.A.) Expired on 09-03-1995

Burial took Place at Uduvil Grave yard on 09-03-1995 at 3-30 p.m.

Miss. S. Nalliah.
Uduvil.
[8378]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 26?/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10 03 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

பிரதேச செயலகங்களில் பணிபுரியும்

## பட்டதாரி பயிலுநருக்கு விரைவில் நிரந்தர நியமனம்

கொழும்பு, மார்ச் 10
பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று இளைஞர் விவகார கிராமிய அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் சாம் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலகங்களில் பணியாற்றிவரும் பட்டதாரிப் பயிலுநர்கள் சமுர்த்தி திட்டத்தின் கீழ் நிரந்தர நியமனம் பெறுவார்கள்.

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் கடந்த வருடம் சேர்த்துக் கொள்ளப்பட்ட பட்டதாரிகளின் பயிற்சிக்காலம் எதிர்வரும் ஜூன் மாதத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது (ஓ-4)

பாதிக்கப்பட்ட மாணவர் விவகாரம்:

## ஜனாதிபதியிடம் மாநாடு கூட்டுமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 10
பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் விவகாரத்தை ஆராய்வதற்காக மாநாடு ஒன்றைக் கூட்டுமாறு கேட்கப்பட்டுள்ளது

யாழ். அரச அதிபர் இது சம்பந்தமான கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஜனாதிபதிக்கு விலாசமிட்டுத் தம்மிடம் கையளித்த மகஜருடன் தாம் அனுப்பிய இணைப்புக் கடிதத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இந்த மாநாட்டுக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழகத் துறைத் தலைவர்கள், யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளர், ஜி சி. ஈ உயர்தர வகுப்புள்ள முன்னணிப் பாடசாலைகள் நான்கின் அதிபர்கள் ஆகியோரையும், தம்மையும் இந்த மாநாட்டுக்கு அழைக்குமாறும் அரச அதிபர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

யாழ். மாவட்ட மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு நீக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அரச அதிபர் தமது கடிதத்தில் வலியுறுத்தி உள்ளார். (அ-4)

## தென்மராட்சியில் நேற்று பாணுக்கு தட்டுப்பாடு

தென்மராட்சி, மார்ச். 10
யாழ் செயலகத்தினால் ஒரு வாரத்திற்கு வழங்கப்பட்ட மா முடிவடைந்துள்ளதால் நேற்று தென்மராட்சிப் பகுதியில் உள்ள பேக்கரிகளில் பாண் உற்பத்தி தடைப்பட்டது.

இரண்டாவது வார மா விநியோகம் செய்யப்படும் வரை பாண் உற்பத்தி செய்யப்படமாட்டாது என பேக்கரி உரிமையாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பாணுக்கு தட்டுப்பாடு நிலவியதால் நேற்று மக்கள் கடைகடையாக அலைந்து திரிந்தனர். (ஓ-117)

## கிராம சேவையாளருக்கு விளம்பர, தகவல் பலகைகள்

யாழ். பிரதேச செயலகம், கிராம சேவையாளர்களுக்கு விளம்பர, தகவல் பலகைகளை வழங்கியுள்ளது.

கிராம சேவையாளர்கள் கடமை நேரங்களில் வெளியிடங்களுக்குச் செல்லும் போது, பொது மக்களின் வசதி கருதி தாம் செல்லும் இடம், அலுவலகம் திரும்பும் நேரம் போன்ற விவரங்களை விளம்பரப் பலகையில் குறிப்பிட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை யாழ். பிரதேச செயலகம் கிராம சேவையாளர்களுக்கான தளபாட வசதிகளையும் செய்து கொடுத்துள்ளது. [ஜ-14-17]

---

**அனுராடப்---**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதென்ற தனது நிலைப்பாட்டை வலியுறுத்தி — அழுத்திக் — கூறுவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு தங்களுக்குரிய பங்கை ஆற்றுமாறு தலைவர் பிரபாகரனையும், விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொள்ளும் வகையில் அறிக்கை முடிவுறுகிறது [அ]

---

**கொழும்பு...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரங்கள் நேற்றுத் தெரிவித்தன

விளக்க மறியல் சிறைச்சாலை தலைமையகத்தைச் சேர்ந்த பொறுப்பதிகாரி ஒருவர் தெரிவித்த தகவலில் சில கைதிகள் வேறொரு பகுதிக்கு மாற்றம் செய்யப்படுவது தொடர்பாக எழுந்த விவகாரமே கைகலப்பில் முடிந்தது என்று கூறினார் பலர் காயங்களுக்கு உள்ளாகியதை இந்த உத்தியோகத்தர் உறுதிப்படுத்தினார்.

நிலைமையைக் கட்டுப்படுத்த [illegible] பொலிஸாரும் அழைக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது (ஓ-4)

---

## கொழும்பில் இளவரசி ஆன்

பிரிட்டிஷ் இளவரசி ஆன் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்தார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் அதிகாரிகள் அவரை வரவேற்றனர். (அ)

## மியூனிச் நகரில் விழுந்த எரிகல்

கடந்த வாரம் ஜேர்மனியின் மியூனிச் நகரில் பெரிய எரிகல் ஒன்று சதுப்பு நிலப் பகுதியில் விழுந்தது.

எரிகல் விழுந்த இடத்தில் 20 மீற்றர் விட்டமும், 8 மீற்றர் ஆழமும் கொண்ட பாரிய குழி ஏற்பட்டுள்ளது. இந்த இடத்தில் ஏற்பட்டுள்ள நீரூற்றுகள் சுமார் 150 மீற்றர் உயரம்வரை நீரை விசிறி அடித்தன. சுற்றுப் புறத்தில் இருந்த இடத்தில் 200 மீற்றர் விட்டத்திற்கு பனிக்கட்டிகள் உருகியுள்ளன.

வருடம் ஒன்றுக்கு 100 கிறாம் எடை கொண்ட 19 ஆயிரம் எரிகற்கள் பூமியில் மோதுவதாக விண் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

---

**வாசுவின்---**

(1 ஆம் க்கத் தொடர்ச்சி)

விரதம் இருப்பது என்றும் அரசாங்கம் தமது கோரிக்கைக்கு செவி மடுக்காவிடில் எட்டாம் நாளில் இருந்து நீர் அருந்துவதையும் நிறுத்துவது என்றும் யுத்தக் கைதிகள் ஆரம்பத்தில் தெரிவித்திருந்தனர்.

இதற்கு இணங்க, எட்டாவது நாளான கடந்த புதன் கிழமை தொடக்கம் நீர் அருந்துவதையும் அவர்கள் நிறுத்தி இருந்தனர்

தற்போது வாசுதேவ நாணயக்காராவின் கோரிக்கையை அடுத்து உண்ணாவிரதிகள் மீண்டும் நீர் அருந்த ஆரம்பித்துள்ளனர்.

அத்துடன் தமது நிலையை விளக்கி வாசுதேவ நாணயக்காராவுக்கு தகவல் ஒன்றையும் யுத்தக் கைதிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

இதேவேளை, உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள பாதிரியார் ஒருவரும் நேற்றுப் பார்வையிட்டார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு உறுப்பினர்களும் உண்ணாவிரதிகளைப் பார்வையிட்டனர்.

---

**கோட்ட...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொச்சி சந்தியில் இருந்து மாலை 4 மணிக்கு ஆரம்பித்த பேரணி யாழ் வீதி ஊடாக கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தைச் சென்றடைந்தது. அங்கு பொதுக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் கோட்டரீதியான பொதுக் கூட்டங்களும், மகளிர் தின விசேட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

யாழ்ப்பாணத்தில் வலிகாமம் கோட்டத்திற்கான மகளிர் தினக் கூட்டமும் கலை நிகழ்வுகளும் மானிப்பாய் மாவீரர் கலையரங்கில் இடம் பெற்றன.

யாழ் மாவட்ட மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன். அரசியல் பயிற்சிக் கல்லூரி ஆசிரியர் திரு மனோ ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டு அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றினர்.

வடமராட்சி கிழக்கில் கடற்புலிகளின் மகளிர் பிரிவினரின் அணிவகுப்பு இடம்பெற்றது. வடமராட்சிக் கோட்டத்திற்கான நிகழ்வுகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றன

தென்மராட்சி கோட்ட நிகழ்வுகள் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றன. யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பு துணைப் பொறுப்பாளர் செல்வி தேன்மொழி பெண்கள் புனர் வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் செல்வி மாலினி, கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், பெண்கள் ஆய்வு நிறுவனத்தைச் சேர்ந்த திலகவதி ஆகியோர் அங்கு இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றினர். கூட்ட முடிவில் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் மகளிர் தினத்தைக் குறிக்கும் விசேட கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நாவற்குழி வனிதா குடியிருப்பில் இடம்பெற்ற தீவகக் கோட்ட நிகழ்வுகளில் செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜனனி உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஓ-4)

---

புலிகளுடன் பேச்சு நடத்த

## அரசதரப்புப் பிரதிநிதிகளை சிபார்சு செய்கிறார் அஸ்வர்

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த நான்கு பிரதிநிதிகளை சிபார்சு செய்துள்ளார் எதிர்க் கட்சி எம்.பியான ஏ.எச்.எம். அஸ்வர்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது அவர் இந்த ஆலோசனையைத் தெரிவித்தார்.

சபாநாயகர் கே. பி ரத்நாயக்க, மங்களமுனசிங்க, ஸ்ரான்லி திலகரத்ன, வாசுதேவநாணயக்கார ஆகியோரையே ஜனாப் அஸ்வர் சிபார்சு செய்தார். (ஓ-4)

அரச ஊழியர்களுக்கு

## அடுத்தவருட ஜனவரி முதல் சம்பளம் அதிகரிக்கப்படும்

கொழும்பு, மார்ச் 10
அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையால் ஏற்பட்ட முரண்பாடுகளை ஆராய்ந்த சம்பள மாற்று ஊழியர் கோப்பு ஆணைக்குழு செய்த சிபார்சின் பேரில் அமைச்சரவை இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா நேற்று செய்தியாளர்கள் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

முழு அரசாங்க சேவையிலும் சம்பள முரண்பாடுகள் இருப்பதாக ஆணைக்குழு கருதுகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

உடனடியாக சம்பள அதிகரிப்பை வழங்குவது கஷ்டமான காரியம் எனவும், எனினும் அடுத்த ஆண்டிலிருந்து சம்பள அதிகரிப்பினை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார் (ஓ-4)

---

**அரசு மீது...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசப் போகின்றோம். நாங்கள் அரசியல் பிரச்சினைகள் பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

கேள்வி: பேச்சுவார்த்தைகள் தொடங்குவதைக் காலம் தாழ்த்தும் நோக்கத்துடன் புதிய நிபந்தனைகளைப் புலிகள் போட்டு வருகின்றனர் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. இதுபற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்: அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகளைப் போடுகிறார்கள் என்பது அரசாங்கத்தின் விஷமத்தனமான பிரசாரமே.

ஏனெனில் இந்த அரசாங்கம் பேச்சுவார்த்தையின் போது கூறியவற்றை வைத்தே நாங்கள் கோரிக்கை விடுக்கின்றோம்.

கேள்வி: பூநகரி இராணுவ முகாம் சர்ச்சைக்கு உரியதாக இருக்கிறது பாதையில் ராணுவக் கட்டுப்பாடு இல்லாத நிலையில் அரசு முகாமை அரை கிலோமீட்டர் நகர்த்தியிருக்கிறது. இருப்பினும் தங்களின் இயக்கம் பாதையைப் பயன்படுத்தத் தொடங்க முகாம் முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என்று கூறுகிறது. ஏன் இப்படிப் பிடிவாதமாகக் கூறுகிறீர்கள்?

பதில்: பூநகரிப் பாதையை திறந்துவிட்டதாக அரசு போலியாக அறிவித்தது. ஏனெனில் பூநகரிப் பாதையைப் பொறுத்தவரையில் ராணுவம் அப்பிரதேசத்தில் இருக்கும்வரை அப்பாதையால் மக்கள் போக்குவரத்துச் செய்யத் தயங்குவார்கள். இந் நிலையைப்பற்றி அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். ஆனால் அரசாங்கம் அனைத்தையும் மறைத்து போலியான அறிவித்தல்களை விடுத்து எங்கள் இயக்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் பிரசாரங்களைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இந்த மாதிரியான அரசின் செயற்பாடுகள் ஒரு நிரந்தரமான சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு தடையாகவே இருக்கும்.

கேள்வி: பூநகரி விவகாரத்தால் அமைதி முயற்சியே அழிந்து போவதைப் பார்க்க விடுதலைப் புலிகள் தயாரா?

பதில்: பூநகரி விவகாரத்தால் சமாதான முயற்சிகளை அரசு நிறுத்துமானால் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுடைய அவலங்களை எப்படித் தீர்க்கப்போகிறது?

கேள்வி: இலங்கை அரசின் முயற்சிகளை ராணுவம் தடுத்துவருவதாக விடுதலைப் புலிகள் பல தடவை குற்றம் சாட்டிவந்துள்ளார்கள். அமைதி முயற்சியில் ராணுவத்தின் பங்கு என்ன என்று கருதுகிறீர்கள்?

பதில்: அமைதி முயற்சிக்கு இலங்கை ராணுவத்தின் பங்கு என்பது உண்மையானது. ஏனென்றால் இன்று முழுமையான நெருக்கடிகளும் ராணுவத்தினராலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளன ஆகவே அரசியல் தலைமைத்துவம் எடுக்கிற முடிவுகளுக்கு ராணுவம் இசைந்து போகும் தன்மை உருவாகும் போது தான் சமாதான முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

கேள்வி: இனப்போருக்கு அரசியல் தீர்வுகாண அரசு விரும்புகிறது என்று இன்னமும் நம்புகிறீர்களா?

பதில்: அரசாங்கம் உண்மையில் எமது மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கொண்டுவரும் என்று எமக்கு, எமது மக்களுக்கு ஆரம்பத்தில் நம்பிக்கை இருந்தது. ஆனால் அரசாங்கத்தின் செயற்பாடுகள் இந்த நம்பிக்கைகள் அனைத்தையுமே கேள்விக்குறி ஆக்கியுள்ளன. (இ-க)

## சாவகச்சேரி பொறியியலாளர் லண்டனில் பலி

லண்டனில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் காஸ் சிலிண்டர் வெடித்ததில் சாவகச்சேரி இளம் பொறியியலாளர் ஒருவர் பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த பொன்னையா துரைசிங்கம் [வயது 38] என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

## கால்நடை தீவனம் உற்பத்தி

கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்குமுகமாகவும் கால்நடைத் தீவனத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாகவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தீவன உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

இதில் முட்டையிடும் கோழிகளுக்கென அரிசி, சோளம், தேங்காய்ப்பிண்ணாக்கு, எள்ளுப் பிண்ணாக்கு, கருவாடு, சிப்பி அரிசித் தவிடு ஆகியவற்றைக் கொண்டும் —

கறவைப் பசுக்களுக்கென அரிசி, சோளம், தேங்காய் பிண்ணாக்கு என்பவற்றுடன் அரிசித்தவிடு மற்ற உள்நாட்டு மூலப் பொருள்களை ஏற்ற விகிதாசாரத்தில் கலந்தும் பதப்படுத்தப்பட்டு தீவன உற்பத்திகள் செய்யப்படுகின்றன.

சுன்னாகம் காமதேனு தீவன உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் இத் தீவனங்கள் கால்நடைகளுக்கு நல்ல பலனை அளித்து வருகின்றன என்று அறிவிக்கப்படுகிறது. (எ)

---

**பேச்சு...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வில்லை.

அரசமைப்பு அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அதிகாரப் பரவலாக்கல் சம்பந்தமான திட்டத்தின் முன் வடிவத்தை அரசாங்கம் உருவாக்கி விட்டதாகவும் இது குறித்து புலிகளுடன் பேசத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

திரு. அன்ரன் பாலசிங்கம் கூறுவது சரியாக இருந்தால் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்காது.

ஆனால் இரு தரப்பினரிடையே தொடர்பில் ஏற்பட்ட இடைவெளி தொடரப் போகிறது.

தனிமைப்படுத்தப் பட்டுள்ள யாழ்ப்பாணம் சென்று பார்த்த போது அரசின் நோக்கம் குறித்து புலிகளிடையேயும் தமிழ் மக்களிடையேயும் அவநம்பிக்கை வளர்ந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

இப்படி ஜோர்ஜ் ஆர்லி தெரிவித்தார். [இ-க]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org